# பாட்டாளி பாட்டு



10294

யோகி சுத்தானந்த பாரதியார்

சுத்தானந்த மலர் 3

# பாட்டாளி பாட்டு

கவியோகி சுத்தானந்த பாரதியார்

(தொழிலாளருக்குப் பாடியது)

வெளியீடு

ஆத்மஜோதி நிலையம்

(நாவலப்பிட்டி (சிலோன்)

ஆத்மஜோதி அச்சகம், நாவலப்பிட்டி.

## தமிழன்பர்களே,

கவியோகி சுத்தானந்த பாரதியார் அருள் பெற்ற மகான். அவர் இலங்கையில் தமிழருக்கிடையே வந்து வேல் – வழிபாடு நடத்தி ஆவேசப் பாடல்களைப் பாடி உங்கள் நன்மைக்காக முருகனை வேண்டினர். அந்தப் பாடல்கள் இந்த நூலில் உள்ளன. நீங்கள் ஆங்காங்கு பஜனை மடங்களை நாட்டி, இந்த அரிய பாடல்களை ஆவேசமாகப் பாடுங்கள்; ஆடுங்கள். வீடுதோறும் விளக்கு வைத்து முழக்குங்கள். சொற்களைத் தெளிவாகச் சொல்லி அவரவருக்கு இயல்பாக வரும் பண்ணில் பாடுங்கள் - ஆர்வமே முதன்மையாகும். பெண்கள் கும்மி தட்டிக் குதியுங்கள். இந்த அருள் வாக்குகள் உங்களுக்கு மங்கல வாழ்வைத் தரும். இந்தப் பாடல்களை வெளியிடப் பொருளுதவி செய்தவர் சுத்தானந்தரின் பரமபக்தரான கிருஷ்ணபிள்ளையாவர். அன்புச் செல்வர் வாழ்க.


இந்த அன்பு வள்ளல் சுத்தானந்தரின் சிவ முருகன் வழிபாட்டை முன்பே வெளியிட்டு இறுமாக வழங்கினர். தமிழகததில் உழைப்பறம் புரி

யும் பாட்டாளருக்காக இந்தப் பாட்டாளி பாட்டை நமது அருட்கவி பாடியளித்தார். தேயிலை மன்னரான கிருஷ்ணபிள்ளையின் தாமரைவல்லித் தோட்டத்தில் நமது கவியோகி அப்பாடல்களை முழக்கினார். இலங்கைத் தொழிலாளருக்கு இப் பாடல்களை அர்ப்பணிக்கிறோம்.

கவியோகியாரின் மந்திரமாலையையும் அன்பு வள்ளல் கிருஷ்ணபிள்ளை அடுத்து வெளியிடுகிறார். இந்நூல்களின் வருவாய் முழுதும் கவியோகியின் அறிவு - வேள்விக்கே பயனாகிப் பன்னூல்களாகப் பெருகி வளரும் என்பதைத் தமிழுலகிற்குத் தெரிவித்துக் கொள்கிறோம். முருகன் அருளும் அன்பர் ஆர்வமும் எம்மை முன்னின்று முன்னேற்றுக.

விஜயதசமி நாள்
சுத்தானந்தரின்
யோகசித்தித் திருநாள்.

ஆத்மஜோதி நிலையம்,
நாவலப்பிட்டி.



மகரிஷி சுத்தானந்த பாரதியார் அவர்கள்
தாமரைவல்லித் தோட்டத்திற்கு எழுந்தருளிய
போது
அன்பு வள்ளல் கிருஷ்ணபிள்ளை அவர்களும்
அவரது பாரியாரும்
சுவாமிகளை மாலைசூட்டி வரவேற்கின்றார்கள்.

# 1. ஓங்காரம்

ஓம் ஓம் ஓம் ஓம்
ஓம் ஓம் ஓம்
ஓம் ஜய ஓம் ஜய ஓம் ஜய ஓம்
ஓம் ஜோதி ஓம் ஜோதி ஓம் ஜோதி ஓம்
ஓம் சிவ ஓம் சிவ ஓம் சிவ ஓம்
ஓம் குஹ ஓம் குஹ ஓம் குஹ ஓம்
ஓம் சக்தி ஓம் சக்தி சுத்த சக்தி ஓம்
சுத்த சக்தி சுத்த சக்தி சுத்த சக்தி ஓம்
ஓம் ஜய ஓம் ஜய ஓம் ஜய ஓம்
ராம் ஜய ராம் ஜய ராம் ஜய ராம்
சியாம் ஜய சியாம் ஜய சியாம் ஜய ஓம்
பிரேம் ஜயப் பிரேம் ஜய
ப்ரேம் ஜய ஓம்
ஓம்
சுத்த சக்தி சுத்த சக்தி சுத்த சக்தி
ஓம் சிவம்
(நான்கு தடவை)
ஓம் ஓம் ஓம்.

கூட்டாகக் கூடிக் குழைந்து குரலெடுத்துப்
பாட்டாளி பாட்டை நாம் பாடிடவே — நாட்டில்
உழைப்போர் நலம்பெறவே உள்ளப் பெருமானை
அழைப்போம் அருளன்பி னால்

## 2. எல்லாரும் வாருங்கள்

எல்லாரும் வாருங்கள்
எல்லாரும் கேளுங்கள்
ஈசனை அன்பு செய்வோம்
எல்லாரும் பாடுங்கள்
எல்லாரும் ஆடுங்கள்
இன்பச் சிகரத்திலே — ஓம்
அன்பே சிவபெருமான்.

சாதி மத நிற பேதமில்லை — சுத்த
சக்தித் தணல் வீரர் நாம்
ஆதி பகவனின் சோதியிலே வளரும்
அன்புக் குழந்தைகள் நாம்

ஒன்றே பரம்பொருள்
ஒன்றே உயிர்த்தொகை
ஒன்றே உலகாலயம் — தூய
உள்ளம் அதன் வாயிலாம்
நன்றே நினைத்திடுக
நன்றே புகன்றிடுக
நன்றே புரிந்திடுக — இந்த
ஞாலம் செழித்திடுமே — நல்ல
காலம் தழைத்திடுமே
ஓம்

✶

## 3. பரம் பொருள் துதி

உலகக் கோவில் பெருமானே
உள்ளத்தானே ஓம் வணக்கம்
நலமே புரியும் நடராஜா
ஞானக் கூத்தா ஓம் வணக்கம்.

அன்பில் விளையும் ஆரமுதே
அறிவாய் நிறையும் ஆண்டவனே
இன்பச் சுடரே எம்மானே
இதயச் சிவனே ஓம் வணக்கம்.

தொழிலால் உன்னைத் தொழுகின்றோம்
தொழில் ஐந்தாற்றும் தொழிலப்பா
எழிலும் பலமும் ஈந்திடுவாய்
எங்கள் குருவே ஓம் வணக்கம்.

*

## 4. கணபதி வணக்கம்

ஓம் வடிவான கணபதியே
உயிருக்குயிரே ஓம் சரணம்
பூம் புவி போற்றும் புண்ணியனே
பூரண குருவே ஓம் சரணம்.

சரணம் சித்தி விநாயக னே
சரணம் விக்னநிவா ரண னே
சரணம் சிவ சங்கர சுதனே
சரணம் பார்வதிபாலக னே.

மூலாதாரக் குண்டலியே
முத்தொழில் புரியும் ஆண்டவனே
மேலாதாரச் சின்மயனே
வேதப் பொருளே ஓம் சரணம்

அகரம் போலே அமர்ந்திருப்பாய்
மகரம் போல வயிறுடையாய்
உகரத் துதிக்கை கொண்டவனே
ஓங்காரத்தின் உட்பொருளே'

ஏழுலகத்தை மோதகமாய்
ஏந்தும் வேந்தே நின் சரணம்
வானுலகத்தின் காவல னே
வரதாயகனே ஓம் சரணம்.

*

## 5. முருகா ஓம் முருகா

முருகா ஓம் முருகா ஓம் முருகா ஓம் முருகா
சிவ முருகா! வேல் முருகா! ஜய முருகா சரணம்

மன்றுடும் சிவக்கனலே முருகா ஓம் முருகா
மனதாடா மலை மருந்தே முருகா ஓம் முருகா
குன்றுடும் குமரேசா முருகா ஓம் முருகா
குழந்தை யெனவிளையாடும் முருகா ஓம் முருகா

ஓங்கார தேசிகனே முருகா ஓம் முருகா
உள்ளான்ம நேசனே முருகா ஓம் முருகா
ஆங்கார நாசகனே முருகா ஓம் முருகா
ஆத்மஜோதி விலாசனே முருகா ஓம் முருகா

பச்சை மயில் வாகனனே முருகா ஓம் முருகா
பாலசுப்பிர மண்ணியனே முருகா ஓம் முருகா
உச்சமலைத் தவப்பிழம்பே முருகா ஓம் முருகா
உனக்கேநாம் ஆளானோம் முருகா ஓம் முருகா

பற்றவரின் பகை யொழிப்பாய் முருகா ஓம் முருகா
பவபந்தம் போக்கிடுவாய் முருகா ஓம் முருகா
கற்றவரின் கைக் கனியே முருகா ஓம் முருகா
காதலரின் கண்மணியே முருகா ஓம் முருகா

அன்பான சிவக்கொழுந்தே முருகா ஓம் முருகா
அழகான தவப்பிழம்பே முருகா ஓம் முருகா
இன்பான மெய்த் துணைவா முருகா ஓம் முருகா
இயல்பான வாழ்வமுதே முருகா ஓம் முருகா

உதயரவி போல் விளங்கும் முருகா ஓம் முருகா
யோகமணி யானவனே முருகா ஓம் முருகா
இதய குகை இருந்தருளும் முருகா ஓம் முருகா
இடர்தீர்க்கும் வித்தகனே முருகா ஓம் முருகா

சுடர்வடிவேல் சுந்தரனே முருகா ஓம் முருகா
சுத்தான்ம சுதந்தரனே முருகா ஓம் முருகா
அடர்துயரம் தீர்மருந்தே முருகா ஓம் முருகா
அருளினிக்கும் பெருவிருந்தே முருகா ஓம் முருகா

கண்கண்ட கதிர்காமக் கனலே ஓம் முருகா
கலிகண்ட அற்புதமே கந்தா ஓம் முருகா
பண்கண்ட அருண கிரிபாடிய ஓம் முருகா
பதியன்பர் துதிமனதிற் பரவசமாம் முருகா

பரிவான குரு நாதா முருகா ஓம் முருகா
பசுபாச வினைதீர்ப்பாய் முருகா ஓம் முருகா
விரிவானக் கருமுகிலே முருகா ஓம் முருகா
விளைவேற்றும் மழையமுதே முருகா ஓம் முருகா

வானுலக மச்சுளெல்லாம் முருகா ஓம் முருகா
வாழ்வாங்கு வாழவருள் முருகா ஓம் முருகா
தேனுலவுஞ் செந்தமிழா முருகா ஓம் முருகா
தென்பழநி யாண்டவனே முருகா ஓம் முருகா

சித்தாந்த முத்தியருள் முருகா ஓம் முருகா
வேதாந்த சிரமான முருகா ஓம் முருகா
சுத்த சக்தி யோகமருள் முருகா ஓம் முருகா
சுப்பிர மண்யா ஓம் ஹர ஹர முருகா ஓம் முருகா

# 6. பயமில்லை

பயமில்லை பயமில்லை பயமில்லை யே
பழனிக்கு மரனுண்டு பயமில்லையே,
துயரில்லை துயரில்லை பகையில்லையே
சுடர்வேலன் துணையுண்டு துயரில்லை யே

ஜயமுண்டு ஜயமுண்டு சரிவில்லை யே
ஜயசக்திக் கனலுண்டு மயர்வில்லை யே
செயலுண்டு பலமுண்டு திருவோங்குமே
சிவமுண்டுதவ முண்டு அருளோங்குமே

ஓம் சிவ முருகா சரவண பவனே
உள்ளக் குகைக் கனலே
பூம்புவி போற்றும் பூரண யோகப்
பொலிவே எம் புகலே,
வேம் பகை யின்னல் வீழ்ந்துபட்டொழிய
வேலினை வீசிடு வாய்,
ஆம் உனையன்றி யார் துணை யிங்கே
அன்புப் பெருமானே.

ஆலாகாலம் அமுதென வுண்டான்
அருளிய தவக்கன லே
வேலா பகைவர் காலாவுன்னை
வேண்டி முறையிட்டேன்
தோலா தன்பர் தூயமுயற்சி
துணை குரு பரனே
கோலா காலக் குமரா அமரா
குகனே குரு பரனே!

# 7. நல்ல வரம்

நல்ல வரந்தருவாய் - பராசக்தி
நாவினிலே வருவாய்
அல்ல லறுத்திடுவாய் - தாயே
அபய மளித்திடுவாய்

பிணி துயர் வறுமை — பழம்
பீடைகள் போயொழிய
அணியழகுடனே — வாழும்
ஆற்றலை ஈந்திடுவாய்

அலைசின வெறிகள் - அடங்கி
ஆணவப் பேயடங்கி
மலையென வுறுதி — கொண்ட
மனநலந் தருவாய்

அழுந்திருள் போக - மயக்கும்
ஆசைத்தினவேக
எழுந்திரு கனலே — இதயத்தில்
இன்பக்கதிரவன் போல்

பாட்டுப் பறவைகள்போல் - ஓமெனப்
பாயும் அருவியைப் போல்
தோட்டக்கனி மரம் போல் - சுதந்தரத்
தொண்டு செய்யின்ப மருள்

கல்வி யறிவளிப்பாய் — நல்ல
கனதனமளிப்பாய்
செல்வத் தொழில் புரிய - பராசக்தி
திண்மை யளித்திடுவாய்

தெள்ளிய செந்தமிழின் - தெய்வத்
 தீஞ்சுவை யீந்திடுவாய்
வள்ளுவர் கம்பரைப்போல் - வரம்பெற்ற
 வாக்கினிமை தருவாய்

பிள்ளையென எனை நீ — எந்நாளும்
 பேணிவளர்த்திடுவாய்
உள்ளப்பொதுவெளியில் — ஆடும்
 உண்மைச் சுடரொளியே.

★

## 8. ஓம் சக்தி ஓம்

ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்
 ஓம் வாணி ஓம் லக்ஷ்மி ஓம் காளி ஓம்

அன்னை யன்னை யென்று நான்
 அனல்பெறக் கதறினேன்
என்னை யாண்ட ருளுவாய்
 இதய சக்தியே [ஓம்]

அச்சப் பேய் நடுங்கவே
 ஆத்மசக்தி பொங்கவே
நச்சனைய தீவினை
 நலியச் செய்தருள் [ஓம்]

தொல்லை யின்றி வாழ்விலே
 தோல்வி யின்றி என்றுமே
இல்லையின்றி ஈந்திடச்
 செல் மீந்தருள் [ஓம்]

நாளெலாம் உழைத்திடும்
நல்ல மக்கள் இன்புற
நூளெலாம் பொன்னுகிடத்
தொழில் சிறக்கவே - நாட்டின்
எழில் சிறக்கவே [ஓம்]

வன்ன வட்ட வுலகிலே
வறுமையின்றி வாழவே
உன்னருள் சுரந்தருள்
ஒளிரும் அருவியே [ஓம்]

கலக வெம் பிசாசுகள்
கனல் பொழிந்த போதிலும்
இலகு முன் கருணை யெம்மை
இனிது காக்கு மே [ஓம்]

அருமையான பிறவியை
அதஞ் செயாத கந்தைப் பேய்
ஒருமையான யோகத்தை
ஊக்கி யாளுவாய் [ஓம்]

விலகிடத் துயர்க்குலம்
வேற்றுமைகள் அற்றிட
இலகும் அன்புப் பொது நலம்
எங்கு மோங்கவே [ஓம்]

நா யெனச் சினத்தினர்
நரியென மனத்தினர்
பே யெனக் கொடுமைசெய்
பிணியைப் போக்கு வாய் [ஓம்]

நேயமான தூய்மையான
நேர்மையான நண்பரைச்
சே யெனக்குச் சேர்த்தருளாய்
தேவ தேவியே [ஓம்]

எல்லையற்ற வானமே
இயற்கையான மோனமே
சொல்லரிய ஞானமே
சுத்த சக்தியும் [ஓம்]

✱

## 9. கன்யா குமாரி

கல்யாணி ஆதி

**பல்லவி**

கண்டார் மனங் குளிரும்
கன்யா குமாரியே
கருணைத் தடங் கடலே

**அனுபல்லவி**

விண்டார் பேரின்ப மெய்
விளங்கும் குகக் கனலே
வீரர் குலத்தெய் வமே
வெற்றிதரும் துர்க்கையே [கண்டார்]

**சரணம்**

கால மெல்லாம் உள்ளங்
கசிந்து கசிந்துருகும்
கன்னித்தமிழ் பாடிக்
கைகூப்பி வணங்கினேன்
நீலக் கடலோரம்
நிட்டை கூடி யிலகும்
நின்மலத் தெய் வமே
நீயன்றி நானில்லை [கண்டார்]

எளிய நடை யழகும்
இனிய இள நகையும்
இதயங் களிக்கவரும்
இனிய பொலிவழகும்
ஒளிரும் சிவசக்தியே
ஓங்கார வேதத்தின்
உருவான திருவான
அறிவானந்தச் சுடரே. [கண்டார்]

✶

## 10. பொது வணக்கம்

எல்லாம் வல்ல இறைவா!
எங்கும் உயிராய் நிறைவாய்
அல்லல் போக்கும், பரமா
அரி ஓம் சிவனே சரணம்

வானாய் மலையாய் நதியாய்
வனமாய் மலராய்க் கனியாய்
தேனாய் அழகின் கலையாய்த்
திகழும் இன்பத் திருவே

உடலும் உயிரும் மனமும்
உளமும் வளமுற்றிடவே
கடமை புரியும் கனலைக்
கருணைக்கடலே யருளாய்

பலவாய் நிலவும் உலகில்
பரிவாய் ஒருமை புரிவாய்
நலமே பொலியும் பலமே
ஞானச்சுடரே யருளாய்

பக்திக்குருகும் பரிவே
பாருக்கெளியாம் அறிவே
சக்திக் குகனே யருளாய் - ஓம்
சாந்தக் கதிரே வணக்கம்.

✶

## 11. இன்ப வாழ்வு தருவாய்

இன்ப வாழ்வு தருவாய் - என்
இதயமான குருவே
பொன் பரவுங்காலே - பாடும்
புள்ளினத்தைப் போலே - நல்ல
புதிய வாழ்வு தருவாய்

வானைப் போல ஞானம் - பொழி
மழையைப் போலத்தானம்
தேனைச் சேர்க்கும் வண்டு - போலே.
சேர்த்துழைக்குந் திறமை - தருவாய்
தெய்வமான குருவே

உலகச் சிற்பியான - கதிரோன்
உரையிலாது சொல்லும்
இலகு நல்லமைதி — நல்கி
இவ்வுலகைக் காப்பாய் - குருவே
இன்னலின்றித் தீர்ப்பாய்

மலையைப் போல மாண்பும் — அதன்
மௌன ஊற்றினின்றே
அலையெழுந்து பாடி - ஓடும்
ஆறுபோல நாளும் - உன்
அருள் பெருக வருவாய்.

# 12. வேதப் பொருள்

ஒன்றே கடவுள் உயிருக்குயிராம்
இங்கும் அங்கும் எதுவும் அதுவாம்
வினைக்கு முதலாம் அனைத்துந் தானும்
அனைத்திலும் அதனை அறிவோம் யாமே
உலகப் பெருமான் உள்ளத்துணர்வான்
அழியும் சடத்துள் அழியாச் சித்தாம்
ஒன்றே பலவாம் பலவினும் ஒன்றும்
ஜீவசாட்சியாம் தேவ தேவனே!
வித்தொன்றதுவே விரிந்து பலவாம்
அதுவே ஆன்மா அதுவே உலகம்
அதுவே தாமென்றறியும் அறிஞர்,
அன்னியம் காணார்; ஆனந்தம் அவர்க்கே!
வேதப் பெருமான் ஆதி முதல்வன்
ஓங்காரத்தின் ஒலித்திரளாவான்,
ஏழிசை யுள்ளே யாழிசை இனியோன்,
சுத்த சக்திச் சுயஞ் சுடரானோன்,
சச்சிதானந்தனைச் சரண்புகு வோமே!
திண்ணிய வுடலும் தீந்தேன் மொழியும்
அமுதுறு வாக்கும் அறிவுச் செல்வமும்
கல்வியும் கேள்வியும் செல்வத் திரளும்
மாசறு மனமும் மங்கல வாழ்வும்
ஒழுக்கமும் விழுப்பமும் உயர்நலப் பொலிவும்
அருளுக இறைவன், அனைத்தும் வாழ்கவே
நன்னூல் ஓதுக நலமே புரிக.
தாய் தந்தை ஆசார் தமர்விருந்தினரும்
கடவுள் என்றே கருதிப் பணிக!
உண்மை பேசுக, திண்ணறம் பேணுக
ஒற்றுமையாக உலகில் வாழ்கவே!
ஒருங்கு செல்மினோ! ஒன்றி உணர்மினோ!
ஒருமன நேயராய் உள்ளொன்றி வாழ்மினோ!
ஆருயிர் வாழ்வெலாம் ஆண்டவனுக்கே

வேள்வியதாகுக, வெல்லுக உண்மை!
அல்லது நீங்குக! உள்ளதே ஓங்குக!
இருட்கணம் ஒழிக! அருட்சுடர் பொலிக!
மடமை ஒழிக! மங்கலம் பொங்குக!
அழிநிலை ஒழிக! அமரத்தன்மை
செழித்துவளர்க! தீமை நலிக!
சுத்தான்ம நேயம் துலங்குக யாங்கும்
துன்பம் தொலைக! தொல்லுல கெல்லாம்!
இன்பமே சூழ்க! எல்லாரும் வாழ்கவே.

★

# 13. பரம்பொருள் வணக்கம்

ஓங்காரமான பொருளே
உலகாய் விளங்கும் அருளே
நீங்காத இன்ப நிறைவே - எம்
நெஞ்சக் கோயிலின் இறைவா

மோனத்திலே உணர்வாகும் - பர
முத்திக் கனலே சரணம்
ஆனந்தமான குருவே — ஆ
காசமான உருவே

வேதங்கள் ஓதும் ஒன்றே - நினை
வேண்டினோம் வரந் தருவாய்
சாதி மதங்க ளின்றி - ஜீவ
சாட்சி யாகும் சுடரே

கருணையாகுக உள்ளம் - நின்
காட்சியாகுக கண்ணே
அருண ஜோதி போலே - எங்கள்
அறிவில் உன்னொளி பொலிக

சாந்தமான வாழ்வும் - நின்
சக்தி பெற்ற செயலும்
மாந்தர் அமரராகும் - சிவ
மங்களமும் தருவாய்.

✶

## 14. சமரஸ ஜோதி

பேஹாக் ரூபகம்

ஓம்...சமரஸமான ஜோதியே - என்றும்
ஒற்றுமையாய் உலகம் வாழ
ஒளிர் குணநிதியே
தீமை நீங்கி நன்மை யோங்கவே - செல்வத்
திருவுங் கலையும் அறிவும் புகழுந்
திகழ மகிழவே

அன்புச் சிகரமான ஞானமே - எங்கள்
அகமும் புறமும்பரவி யாளும்
அருளின் வானமே...
இன்ப மோங்குங் கருணை வெள்ளமே - நின்
இச்சை புரிக அச்சமின்றி
இணைந்தெம் உள்ளமே...

★

## 15. உன்னத வாழ்க்கை

உன்னத வாழ்க்கையருள் — பரமா
உள்ளப்பரம் பொருளே
சன்ன வாக்கருளாய் - ஆத்ம
சக்தி மிகத் தருவாய்

ஆறு கலந்தாலும் - கதிரால்
ஆவியாய்ப் போனாலும்
மாறுபடாக் கடல் போல் - எங்கள்
மனமிருக்க வருள்

பருவகாலத்திலே - இயற்கை
பணிநலம் பரவும்
திருவினைப் போலே - எமது
செய்கடனோங்க வருள்

வான விரிவினைப் போல் - நல்ல
மன விசாலத்துடன் — வாழ
ஞானவிரி வருளாய் — இந்த
ஞாலச் சுடர் மணியே.

★

## 16. கருணையுள்ளம்

கருணையுள்ளங் கனிந்தெம்மைக் காவாய்
கட்டில்லாப் பரமானந்தக் கடலே
அருண சாந்தமும் ஆத்ம ஒளியும்
அறிவும் செல்வத் திருவும் அருளாய்

நேர்மையான நினைவும் செயலும்
நீண்டு யர்ந்து நிலாவும் புகழும்
கூர்மை யான மதியும் கொடுப்பாய்
கோவிலாக வுலகினைக் கொண்டாய்

புட்கள் பாடும் புதுமணக்காலை
போல மங்கலம் பூத்துக் கனிந்து
மக்க ளிங்கு மகிழ்ந்து பொலியும்
வளமை யீந்தருள் வண்மைக் கடலே

உள்ளம் ஒன்றி உயிர்க்குலம் ஒன்றி
உலகம் ஒன்றி உயர்நலம் ஒன்றி
வெள்ளமாகப் பேரின்பம் பெருக
வீறுதந்தருள் வேதமுதல்வா

நல்ல நல்ல முயற்சி களாலே
நல்ல நல்ல பயன்களை நாடி
அல்லல் போக்கி அறத்தை வளர்க்கும்
ஆத்ம சக்தி யருள் பரமாத்மா.

★

## 17. பொன் பரவுங் காலை

பொன் பரவுங் காலையிலே பூத்தசுடர் மணிபோலே
அன்பருளத் தொளி வளரும் அற்புதனைச் சிற்பரனை
இன்ப மயம் ஆனவனை எல்லார்க்கும் பொதுப்
பொருளை
பண்பரவி அடிதொழுது பணிகளினுல் வழிபடுவோம்

பேரெல்லாம் வடிவெல்லாம் பெம்மானின்பேர்
வடிவாம்
பாரெல்லாம்திருக்கோயில் பத்தருளம் சந்நிதியாம்
ஊரெல்லாம் உயிர்க்குயிராய் உலவுகின்ற
பரமாத்மா
சீரெல்லாம் தரும் இறைவன் சேவடிக்கே
ஆளாவோம்

நிறைவான கல்விவளம் நீங்காத செல்வ வளம்
முறையான நல்லொழுக்கம், முயற்சிதரும்
முன்னேற்றம்
பொறை வாய்மை மனவுறுதி பூண்டதவ
யோகமெல்லாம்
இறைவனருள் அடியார்கள் எய்தியிசை யோங்கவே

பத்திவளர் உளத்தாலே பணிபுரியும் கரத்தாலே
புத்திவளர் அறிவாலே பூரணமாந்தவத்தாலே
ஒத்தமன வுறவாலே ஒருகுலமாம் வாழ்வாலே
சுத்த சக்தி ஆண்டவனைத் தொண்டரெலாம்
தொழுவோமே.

✶

## 18. கருணைப் பெருமானே

கருணைப் பெருமானே கனகச் சுடரானே
அருணோதயம் போலென் அறிவிற் பொலிவோனே
திருவார் குருநாதா சிவனே என உள்ளம்
உருகும் பெருவாழ்க்கை உடையார் பெரியாரே

வற்றாக் கடலானை மலையிற் பெரியானைப்
பெற்றார் அன்பிற்கும் பேரன்புடையானைக்
கற்றார் கொண்டாடும் காட்சிக் கினியானைப்
பொற்றாமலர்ப்பாதம் போற்றிப் பணிவோமே

ஞானப் பரஞ்சோதி ஞாலம் படைத்தாண்டும்
தானே தனியாகத் தாக்கற் றொளிர்வானை
வானைத் தருள்வானை மாந்தர்க் குயிரானை
ஊனைத் துறைவானை உள்ளொத்துணர்வோமே

கண்டார் மனமுண்ணும் கல்விக் கடலானை
விண்டார் அமுதுண்ணும் மெய்யின் பறிவானை
பண்டார் மறை கோடி பாடும் பொருளானைத்
தொண்டார் துதி பாடித் தொழுவார் மகிழ் வாரே

அறிவன் பருளாற்றல் அறத்தால் வரு மின்பம்
திறலார் வினைவெற்றி தேசத் திருத்தொண்டு
பிறவிப் பயனெல்லாம் பெறுவார் எல்லாரும்
இறைவன் மலர்ப்பாதம் ஏத்தும் அறவோரே.

# 19. தாகந் தணித்திடுவாய்

சுருட்டி ஆதிதாளம்

தாகந் தணித்திடுவாய் — மனத்
தாகந்தணித்திடுவாய் — எந்
தாய்தந்தையான தயாபரத்தேனே (தா)

தேகாதிக் கெட்டாத போகம்புசித்துசுத்த
யோகச் சுதை யளித்தென் உள்ளே
அமுதூறத் (தா)

பற்றற்ற காற்றைப் போலே
சுற்றிக் கடமை செய்து
பாயும் அருவி போலப்
பாருக்குதவி நிதம்
கற்ற கலைகளுக்கும் எட்டாக் கனிபிழிந்து
கருணையால் நீயளிக்கக்
காதலால் நானருந்திக்
கண்ணுடி உள் நாடிப்
பண்பாடிக் கலந்திடும்
தாகந் தணித்திடுவாய்.

✶

# 20. காணிக்கை

காணிக்கை ஏலாய் பரமா - எம்
கருத்தினில் இனிக்கும் கற்பகக்கனியே (காணி)

ஆணிப் பொன்முத்தும் வைரமும் உன்றன்
அழகினுக் கழகென லாமோ?
அகமிக நெகிழ முரு முரு வெனவே
ஆர்வக் கண்ணீர் அருவி - அதனைக் [காணி]

எண்ணும் எண்ணம் இயம்பும் சொற்கள்
இயங்கும் உணர்வுகளெல்லாம்
பண்ணும் பணியும் பயனும் உனக்கே
பணிந்தீந்தோம் பரமா [காணி]

உலகிற் பட்ட பலபல துன்பம்
உடைத்த நெஞ்சுடனே
கலகல வென்றுன் கருணையுருகக்
கதறிக் கால்பிடித்தோம் - அம்மா [காணி]

போதும் போதும் பொய்கோள் அச்சம்
பொறுமைப் புண்களெல்லாம்
போதும் உலகம் போதும் கலகம்
பூரண சுதந்தரனே — எம்மைக்
காணிக்கை ஏற்றருளாய்.

★

## 21· உன்னதஞானம்

உன்னத ஞான வூற்றினி லாடி
உள்ளங் குளிர்ந்திடுவோம்
உள்ளம் அன்பு வெள்ளமாக
ஓமிசைத் திடுவோம்
அன்னிய மாயச் சூதினை நம்பி
அடிமை யாகா மே
ஆண்மையும் ஆன்மக் கேண்மையுங் கூடி
அறிவாயிருந் திடுவோம்
தன்னந் தனியே யுலகக் காட்டிற்
சஞ்சலப் பேயினிடம்
தவித்து வாடித் தளர்ந்திடாது
சாது சங்கம் வகிப்போம்

என்ன தெனக்கே யென்பதில்லாமல்
எல்லாம் வல்லானும்
இதயப் பெருமானுக்கேயாகி
இரண்டறக் கலந்திடுவோம் - நாம்
எல்லோரும் மகிழ்ந்திடுவோம்

✶

## 22. மனவுருக்கம்

காத லாகி மனதுருகும்
கவியைக் கேளாயோ
கவிதைக் குள்ளே கண்ணீர் சொல்லும்
கதையறியாயோ — அன்
பதை யறியா யோ!

வேதனைகள் மோதும் போதென்
விசனம் தீராயோ
வீணை மீட்டிப் பாட்டின்பத்தின்
விருந்தை யூட்டாயோ — ஞான
மருந்தை யூட்டாயோ

மேதினியின் சோதனையால்
மெலிந்தபோது நீ
வீறுநல்கும் வேதப்பாலை
விரும்பித் தாராயோ — இன்பம்
அரும்பப் பாராயோ

ஆதி யுண்மை போதித் தென்றன்
அறிவைத் தூண்டாயோ — என்
ஆர்வந் தீராயோ?
அவனி மதங்கட் கப்பா லூறும்
அமரத் தேனூற்றே.

# 23. ஏனோ……?

கடவுளும் ஒன்றே காசினி ஒன்றே
கருதிடும் உள்ளமும் ஒன்றே
உடலுயிர் ஒன்றே உண்மையும் ஒன்றே
ஓயாப் பிரிவுசெய் மதமேனோ?

கண்ணனும் ஒன்றே கீதையும் ஒன்றே
கண்ணறுவாதக் களமேனோ?
புண்ணியம் ஒன்றே புத்தரும் ஒன்றே
புதுப்புது வகுப்புகள் புகலேனோ!

கருத்தரும் ஒன்றே பைபிளும் ஒன்றே
காக்கும் சிலுவையும் ஒன்றே
பொருத்த மில்லாத போர் வெறியேனோ
பொய்ப்பிரி வினைகளும் ஏனோ?

கண்ணிய தீர்க்க தரிசிகள் யாரும்
கைப்பட எழுதிய தில்லை
நுண்ணிய பொருளைப் பண்டிதர் நுவல
நூறு வேற்றுமை யாச்சே

புதுமையுமில்லை முதுமையுமில்லை
பூரணப் பொருளது வென்றும்
பொது மயமாகும் அது புனிதான்மா
போக யோகப் பொலிவாம்

அன்பே வானும் அன்பே மழையாம்
அன்பே மானிட வாழ்வாம்
அன்பே அறமே அருளே அறிவே
ஆனந்தமென அறிவோமே

★

# 24. பொது நெறி

மனிதர் கட்டும் மனக்கோட்டை
மதக்கோட்டை தாண்டிப்
புனிதர் கண்ட ஒருமை தரும்
பொது நெறியைப் பயில்வோம்

கீதை சொன்ன யோக நெறி
கிறிஸ்து சொன்ன பொறுமை
போதிமுனிகருணை வழி
பொதுநெறி யுள்ளாமே

நாயகத்தின் அருளுறுதி
நானகரின் பக்தி
நாயஞரின் பணிநலங்கள்
நல்ல பொது நெறியாம்

எனதுனதென் றிறு மாக்கும்
இகலை யினித் தாண்டி
இனி திதய நடன வழி
எல்லாரும் செல்வோம்

மாறிப் போன காலத்திலே
மதவெறி நோயின்றி
ஊறிப்போன உள்ளான்ம
யோக நிலையுறுவோம்

வேதாந்த சித்தாந்த
வித்தகரின் வாக்கும்
நாதாந்த முடிவான
நமதான்ம நிலையே
சமயோகக் கலையே!

மனமொழி மெய்த் தூய்மையுடன்
வாசி நிலை யறிந்தே
தின மொருமை கூடியுள்ளே
தெய்வ நிலை பெறுவோம் - இந்த
வையக மின்புறுமே.

✶

## 25. உலகம்

உலகம் மண்ணே உடலும் மண்ணே
உயிரும் உணர்வும் மண்ணோ?
அழகும் மண்ணே அணியும் மண்ணே
அழகின் புன்னகை மண்ணோ?
அமுதக் கிளிமொழி மண்ணோ?

மனமும் பொய்யே கனவும் பொய்யே
வளருள் ளறிவும் பொய்யா?
மனிதான் மாவும் பொய்யா?
இனமும் உறவுந்தினமும் மாறும்
இதயத் துடி மாறிடுமா?
உதயக் கதிர் மாறிடுமா?

இந்த வாழ்வு சந்தையில்லை
இயற்கை மாநாடே
விந்தை விந்தைக் கனவுப் படலம்
விரையும் அதனூடே

தொட்டிலுக்கும் புதை குழிக்கும்
தொடர்ந்த ஒப்பந்தம்
அட்டிலுக்கும் கட்டிலுக்கும்
அலையுமே பந்தம்.

ஞாலத்தியல்பின் கோல மெல்லாம்
நானென்னுந் தோற்றம்
காலத்தியல்பின் கூத்து மனமே
கதை வளர்க்குங் கவிதை

வந்த வாழ்வை நொந் திடாமல்
வளமை யாக்குவோம்
சிந்தனையைப் பண்படுத்திச்
செழுமை யாக்குவோம்

படகு போலே பறவை போலே
பழமரம் போலே
கடமை காக்கும் கதிரைப் போலே
கலந்து வாழ்வோமே
கருணை சூழ்வோமே.

✶

## 26. தியானபூஜை.

தியான பூஜை செய்வோம்—தியான பூஜை
செய்வோம்

சீவ நாதச் சங்கையூதிச்
சிவனை வழிபடு வோம்
தாவும் அருவிப் பாட்டுடனே
சாம கானஞ் செய்வோம்

உருகிக் கரையும் உள்விளக் கை
உயரத்தூண்டுவோம்
கருவி கரணந் தோயதெய்வக்
காதல் கூறுவோம்

வானுலகங் கோயிலென்பாம்
வாழுயிரே கடவுள்
காணியற்கை யழகு தெய்வக்
காட்சி யென்னுவோம்

மழையும் பனியும் மஞ்சனமாகும்
மலர்கள் அணியாமே
குழையும் மனமே சந்தனமாகும்
குணங்கள் மணங்களாம்

ஒவ்வோ ருயிர்ப்பும் அருச்சனையாகும்
உள்ளத்துடிப் பெல்லாம்
திவ்விய நடன மாகும் இதுவே
தியான பூஜையாமே.

*

# 27. இயற்கை தந்த இன்பம்

அச்சுப் போட்ட புத்தகங்கள்
ஆயிரம் படித்தும் என்ன
மெச்சுங் காலைக் கதிரவன் முன்னே
மின்மினிகள் என்னே!

வானமான வட்ட நூலை
வாயை மூடிக் கற்றேன்
ஞானமான பாட்டருவி
நடன மாடக் கண்டேன்

பாடு பட்டு நாடு வாழப்
பயிர் விளைப்பான் வாழ்க!
நீடு பச்சைப் பொன் வளமை
நிலாவுங் காட்சி வாழ்க!

வண்டு மொய்த்த தேன் மலரின்
வன்ண வண்மைத்திருவைக்
கண்டு கண்டே ஈந்துவந்து
கலந்து வாழக் கற்றேன்

கனிகளுண்டு கூடிவாழுங்
காட்டுப் பறவைக் கூட்டம்
மனிதனுக்குப் பாடு கின்ற
மறையைக் கேட்டு மகிழ்ந்தேன்

இதயக் குகையில் இலகித் துள்ளும்
இயற்கை தந்த இன்பம்
அதை யறிந்த உலக வாழ்க்கை
அமுத வெள்ள மாமே.

✶

## 28. மானிடப் பிறவி

இதுவா மானிடப்பிறவி — இதை
எண்ணிப்பார் அண்ணே
மெதுவாய் உள்ளே யோசித்துப்பார்
விவேக வழிசேரு — அண்ணே [இ]

காலையில் எழுந்து கைமுகங்கழுவி
கடவுளை நினைக்காமே
கனமாய் முக்காடு போட்டுத்தூங்கிக்
கனவில் உளறுகிறாய் — அண்ணே [இ]

மாலையிலே சிவ முருகா, என்றே
மனசு நினைக்காமே
மாயா காலச் சினிமா வினிலே
மயங்கிப் போனாயே — அண்ணே [இ]

வேலை செய்த கூலிப்பணத்தை
வீட்டுக்குத் தாராமே
வேதனை செய்யும் கள்ளைக்குடித்து
வெறிபிடித் தலைகின்றாய் அண்ணே [இ]

பாலைக் குடிப்பாய் நீராகாரம்
பதனீர் பருகிடுவாய்
பாழுங் கள்ளைக் குடித்து வீட்டைப்
பட்டினி போடாதே அண்ணே [இ]

பீடி சுருட்டு புகையிலைத்துப்பல்
பீடைப் பழக்கமடா
பேய்போல் புற்று நோயுண்டாகும்
பெருநோயும் வருமே — அண்ணே [இ]

ஓடி ஓடி உழைத்த பணத்தை
ஊதாரிக் கீயா தே
உத்தமி தந்த உணவைத் தள்ளி
ஓட்டலுக் கோடாதே — அண்ணே [இ]

கட்டிக் கொண்டு பொங்கிப் போடும்
கண்மணியை விட்டு
வெட்டை ஓட்டும் விபசாரத்தை
விலைக்கு வாங்காதே — கண்
வலைக்குள் வீழாதே — அண்ணே [இ]

மூதேவிக்கு நீ இடம் கொடுத்து
மோசம் போகாதே
முடிச்சவிழ்க்கும் கும்பலை நம்பி
முதலை யிழக்காதே — அண்ணே [இ]

கம்பளி யென்று கரடியைக் கட்டி
கடிவாங் காதேடா
கடனை வாங்கிக் கையைப் பிசைந்து
கவலை சுமக்காதே — அண்ணே [இ]

வம்பு தும்பில் மாட்டிக் கொண்டு
வழக்குப் போடாதே
வாதாடாதே சூதாடாதே
வாழ்வு பாழாமே — அண்ணே [இ]

சந்தோச மாகக் கூடி வாழச்
சம்மதமா அண்ணே
சாமியை நம்பி சண்முகவடிவேல்
சரணம் என்பாயே - அண்ணே

சிந்தை செய்கை பேச்சு நடத்தை
செம்மையாகுமடா — மனச்
சிக்கல் போகுமடா
சென்மம் ஈடேற - அண்ணே
சிவமுருகா என்பாய்

சிவமுருகா ஓம் சிவமுருகா ஓம்
சிவமுருகா ஜய ஓம்
சிவமுருகாவோம் சிவமுருகா ஓம்
சிவமுருகா ஜய ஓம் என்போம்
இதுவே மானிட இன்பம்

★

## 29. கூட்டுறவுப் பாட்டு

இராகம்: மாண்டு தாளம்: ஜம்பை

பங்கு சேருங்கள் - எல்லாரும்
பங்கு சேருங்கள்
மங்களமாய் உங்கள் வாழ்வு
பொங்கி யோங்கவே
பங்கு சேருங்கள் - எல்லாரும்
பங்கு சேருங்கள் - பொது
நன்மை கோருங்கள் - உடனே
பாய்ந்து வாருங்கள் [பங்கு]

கோல உலக நன்மைக்கான
கூட்டுறவுச் சங்கம் — அதில்
காலமெல்லாம் கவலையின்றிக்
கலந்து வாழ்வீரே - மனங்
கனிந்து சூழ்வீரே [பங்கு]

காடு நீக்கி நாடதாக்கிக்
கடுமை யாகவே
பாடுபட்டுப் பால் சுரக்கும்
பண்ணை யாக்கினீர்!
வாடும் ஏழை வறுமையின்றி
வளம் பெருகவே
கேடு நீங்கிக் கவலையின்றிக்
கிளைக ளோங்கவே! [பங்கு]

ஊறிப் போன தோட்ட வாழ்வை
உதறிட வேண்டாம்
மாறிப் போன காலத்தாலே
மயங்கிட வேண்டாம்
மீறிப் போன விதியை நொந்து
விசனங் கொள்ளாதீர்
தேறிப் போன மனதிலின்னுந்
திண்மை கொள்வீரே! [பங்கு]

பத்துப் பத்தாய்ப் பங்கு கூடிப்
பணந்திரட்டுவோம்
பத்திரமாய்த் தோட்டம் வாங்கிப்
பாடுபட்டுண் போம்
முத்துவேர்வை சொட்டச் சொட்ட
முயற்சி செய்குவோம்
சக்தி யோங்கும் சித்தி யோங்கும்
சாந்த மோங்குமே [பங்கு]

செல்வ மோங்கும் சேய்களோங்கும்
சேம மோங்குமே
கல்வியோங்கும் கலைகளோங்கும்
கனிக ளோங்குமே
பல்விதமாய்ப் பாடுபட்டுப்
பால் சுரக்குமே
எல்ல வரும் ஒத்து வாரீர்
இன்புற லாமே. [பங்கு]

✶

## 30. தோட்டத் தொழிலாளர் பாட்டு

தோட்டத்திலே பாடுபட்டுத்
தோழர் வாழுவோமே
நாட்டினுக்கும் வீட்டினுக்கும்
நன்மை நாடுவோமே.

தொண்டினிலே இன்பமுண்டு
தொழிலே நம்சக்தி
வண்டெனவே பாடுபட்டால்
வறுமை யில்லையே!

காரிசையும் ஏரிசையும்
கழனி கால்களில்
சேரிசையும் தேரிசையும்
தேசகீத மாகும்

ஆழியிசை மேகராக
மாகி மழை பொழியும்
ஏழிசையும் தொழிலாளர்
யந்திரத்திற் சுழலும்

ஏழையில்லை கோழையில்லை
ஏமாற்றம் இல்லை
வாழையடி வாழையாக
மங்கலமாய் வாழ்வோம்!

பாட்டாளி வேர்வையிலே
பச்சழகு குலுங்கும்
பாட்டாளர் கூட்டாள
ராகிப் பாடுபடுவோம்

அன்புடனே மனங்கலந்தே
ஆனந்தமாய் வாழ்வோம்
பண்புடனே வள்ளுவனார்
பகுத்த நலம் உணர்வோம்

உபகாரம் செய்தவர்க்கே
உலகினிலே புகழாம்
விவகாரம் வேறினியேன்
வேலைசெய்து பிழைப்போம்

தேசவுயிர் துடி துடிக்கச்
சித்த மொன்றுசேர
நேசரெல்லாம் ஒன்றுபட்டு
நீடுநலம் புரிவோம்.

✶

# 31. ஏழை படும் பாடு

முகாரி | திஸ்ர ஏகம்

ஏழையெளியவர்கள் - படும்
    இன்னலை யெண்ணிஞல் என்மனம் வேகுதே!
கோழைக் குருடர்களாய் - கல்வி
    கொஞ்சமும் இன்றிக் குடிக்கக் கஞ்சியின்றிச்
சூழுந் துயரிடையே - அவர்
    தூண்டிற் புழுப்போலத் துன்பந் துடிக்கின்ருர்
கேள்வி முறையில்லையோ — இவர்
    கேடுற்றழுங் கண்ணீர் நாடெல்லாம் பாயுதே
[ஏழை]

ஒட்டைக் குடிசையிலே - ஐயா
    ஒன்பது பேர்கள் குடித்தனஞ் செய்கின்ருர்
ஆட்டுங் குளிர் பனியில் - கந்தல்
    ஆடையும் இன்றி அவதிப் படுகின்ருர்
வாட்டும் பசிக் கொடுமை — கடன்
    வாங்கிப் படுந்தொல்லை தாங்கமுடியா தே!
மாட்டுக்கு மேய்ச்சலுண்டு - செக்கு
    மாடுபோல் வேலை செய் மாந்தர்க் குணவில்லை
[ஏழை]

ஆலைத் தொழிலாளர் — பலி
    ஆடுகள் போலே முதலாளி யாட்சியில்
வேலைப் படுகளத்தில் — மனம்
    வெட்டுண் டுயிரினை விட்டுண்டு வாழ்கின்ருர்!
மூலை யிருளினிலே - வெய்யில்
    மூஞ்சியும் பாராது தேய்ந்து வெளுக்கின்றது
காலச் சுழற்சியிலே — இவர்
    கட்டுகள் விட்டு விடுதலை காணுமோ (ஏழை)

துக்கம் பெருகு தம்மா — பசித்
துன்பத்தால் ஏழை துடித்துத் துடித்தழும்
பக்கம் திரும்பிடுதே — கண்
பார்த்துச் செங்கண்ணீர் வடித்து வடித்துயிர்

மிக்க வருந்துதம்மா — இவர்
வீட்டு மனைவியர் ஊட்ட விதியின்றி
மக்களுடன் அழுவார் — இவர்
வாழ வழியுண்டோ பாழும் உலகிலே [ஏழை]

✶

## 32. மாரியம்மா கரகப் பாட்டு

நாடு செழித்திட வீடுசெழித்திட
நல்வளந் தந்தருள் மாரியம்மா
பாடுபடும் ஏழை மக்கள் பசிதீரப்
பார்த்தருள்வாய் மாரியம்மா !— துன்பம்
தீர்த்தருள்வாய் சக்தி தாயே மாரியம்மா
நஞ்சை தழைத்திட புஞ்சை தழைத்திட
நல்ல மழை பொழி மாரியம்மா
பஞ்சம் பிணி துயர் பாபம் விலகிடப்
பரிவு கூர்ந்தருள் மாரியம்மா!

ஊரில் அநியாயக் காரர் ஒடுங்கிட
உத்தமர் ஓங்கச்செய் மாரியம்மா
பாரில் சுதந்திரப் பண்பு விளங்கிடப்
பாதுகாப்பருள் மாரியம்மா!

ஏழை யெளியரை யெற்றி மிதித்திடும்
ஈனப் பணத்திமிர் வீழ்ந்திடவே
வாழையடி வாழையாக உழைப்பவர்
வாழ்வு சிறக்கச் செய் மாரியம்மா

சூது பொறாமை சுயநலத் தீமையைச்
சுட்டுப் பொசிக்கிடு மாரியம்மா!
வாது வழக்கின்றி மானிடர் வாழ
வரந்தருவாய் சக்தி மாரியம்மா!

நஞ்சைத் தடவிய நெஞ்சுடையார் அவர்
நாவிற் கனலும் சினமுடையார்
பஞ்சமா பாதகர் சூழ்ச்சிகள் பாழ்படப்
பக்கமிருந்தருள் மாரியம்மா — ஏழை
துக்கந் தவிர் முத்துமாரியம்மா

நோய் நொடி வாராது மக்கள் மனைவியர்
நூறுண்டு வாழ்ந்து மகிழ்ந்திடவே
தாயமுதே ஜீவசக்தியளித் தருள்
சரணம் பரதேவி மாரியம்மா
சங்கடந்தீர் முத்துமாரியம்மா

அன்பும், அருளும் அறிவும் பெருகிட
ஆற்றலும் ஆண்மையும் ஓங்கிடவே
இன்பம் பெருகிட ஈகை வளர்ந்திட
ஏற்றமருள் முத்துமாரியம்மா - எங்கள்
ஏக்கம் தவிர்த்தருள் மாரியம்மா

மாரியம்மா — முத்துமாரியம்மா - செல்வ
மாரியம்மா - சக்திமாரியம்மா
கோரிய நல்வரங் கொண்டு கொடுத்தருள்
கோமள வல்லியே மாரியம்மா

*

# 33. பொங்கலோ பொங்கல்

மங்கல வளமை பொங்க
மாநிலத்தமுதும் பொங்கப்
பங்கய முகங்கள் பொங்கப்
பால்சுரந் தாக்கள் பொங்க
தங்கமும் பச்சையுஞ் சேர்
தளிரழ கியற்கை பொங்கப்
பொங்கலோ பொங்கலென்று
புதுவிருந் தருந்துவோமே

வான் வளம் பொங்க; மாந்தர்
வாழ்வினில் அமைதி பொங்கத்
தேன் வளம்பொங்க; வீரத்
திருவளம் பொங்கச் செய்ய
கோன் வளம் பொங்க நல்ல
குடிவளம் இனிது பொங்க
ஊனுயி ருலகமெல்லாம்
ஒருமையின் பெருமை பொங்க!

பெரிய நல் எண்ணம் பொங்க
பேச்சுடன் செயலும் பொங்க
பிரியமாம் அன்பு பொங்கப்
பிள்ளைகள் சிரிப்புப் பொங்க
அரிய நற்கவிகள் பொங்க
அறம் வளர் செல்வம் பொங்க
விரிதமிழ் உலகு பொங்க
வேலனை வேண்டுவோமே

அழகிய கலைகள் பொங்க
அணிமணிச் செல்வம் பொங்க
பழகிய பண்பு பொங்க
பண்புள காதல் பொங்க

உழவரின் உள்ளம் பொங்க
உழைப்பவர் திறமைபொங்க
அழகிய பொங்கலம்மா
ஆனந்த நடஞ்செய்வாயே!

★

## 34. தீபா வளிப்பாட்டு

பட பட பட பட பட்டாசு
பச்சை சிவப்பு மத்தாப்பு
தடல்புடல் மாப்பிள்ளை கும்மாளம்
தாண்ட மாடுந் தீபாவளி!

கொட்டு முழக்கு குதிபோடும்
குமரிப் பெண்மை சதிராடும்
எட்டுத் திக்கும் எக்காளம்
இருட்டைப் பிளக்கும் பொரிவாணம்

பட்டும் சரிகைச் சவுளிகளும்
பளபள தகதக நகைமின்னும்
வெட்டி வெட்டிடால் வீசும்
வெளிச்சம் பார்த்தால் கண்கூசும்

நாட்டு வெடியை நாம்வீசி
நரகாசுரனும் சாவானோ?
வாட்டும் வஞ்சப் பேய் போமோ
வாரும் அத்தான் சிந்திப்போம்

உலகில் ஆண்பெண் உழைத்துண்டே
உரிமையுடனே உயிர்வாழ்ந்தே
நலமே புரியும் அந்நாளே
நாமும் மகிழும் நன்னாளாம்

வீட்டுக்கு வீடு கல்வியெனும்
விளக்கெரியும் அந்நாளே
நாட்டுக்கு நாடு நட்பாடும்
நாளே தீபா வளியாமே

காற்றுங் கதிரும் கடலும் போல்
கடமை காத்து மனிதான்மா
ஆற்றைப் போலே ஆனந்தம்
ஆகும் அந்நாள் நன்னாளாம்

அரசிய லென்னும் சூதாட்டம்
அச்சத்தாலே பேயாட்டம்
நர சமுதாய வெறியாட்டம்
நாட்டுக்கு நாடு படையாட்டம்

பாட்டாளிக்கு நிலமில்லை
படித்தவனுக்குப் பலமில்லை
ஏட்டாளிக்குப் பிழைப்பில்லை
ஏனென்றாலே பதிலில்லை

மனதைப் பிரித்தான் மத வாதி
மண்ணைப் பிரித்தான் தனிவாதி
இனமே பிரியும் இகலாலே
எங்கே நிலவுந் தீவாளி?

உண்டுடுத்திருக்க ஒரு குலம் போல்
உண்டென நல்கும் வளமோங்கி
அண்டை வீட்டோடருந்துகின்ற
அன்புத் திருநாள் தீவாளி

எண்ணம் உயரும் திருநாளே
ஏக்கம் போக்கும் பெருநாளே
மண்ணுயிர் புதிய மகிழ்வெய்தும்
மங்கல நாளை வாழ்த்திடுவோம்.

# 35. நமக்கு நாமே உதவி

**எதுகுல காம்போதி** **ஆதி தாளம்**

**பல்லவி**

*நமக்கு நாமே உதவி நம்முள்*
*நாமா யிருப்பது பதவி மனமே [நம]*

**அநுபல்லவி**

*தனக்குத்தானே தாரகம் என்பது*
*சத்திய வேத வாக்கு*
*தன்னைத் தன்னால் முன்னேற்றிடவே*
*சாதன சக்தியை ஊக்கு மனமே [நம]*

**சரணம்**

*பிறர் மூச்சாலே நாம் வாழ்வோமோ?*
*பிறர்வாயால் உண்டுபோமோ?*
*பிறர் மனதாலே நாம் நினைப்போமோ?*
*பிறர் காலால்நடப் போமோ [நம]*

*பாடத் தெரிந்தால் . பக்குவமான*
*பக்கவாத்தியங்கள் உண்டு*
*ஆடத் தெரிந்தால் ஆ உரா போடும்*
*அரங்கும் சபையும் உண்டு*
*தேடத் தெரிந்தால் திரவிய முண்டு;*
*தெய்வத் திருவரு ளமுதை*
*நாடத் தெரிந்தால் நமனை வெல்லும்*
*ஞானத் தேனமு துண்டு மனமே [நம]*

நாமே நினைப்போம் நாமே உணர்வோம்
நாமார் எனஆ ராய்வோம்
ஓமே அதுவாய் ஒருமைப் பொதுவில்
உயிருக்குயிராய் உளதாம்
உயிர் வாழ்வதனின் பயிராம் மனமே
நமக்கு நாமே உதவி உலகில்
நாம் நாமாயிருப்பது பதவி மனமே...

★

## 36. வேளாளர் வாழ்த்து

ஆளாளர் செங்கோலும் அந்தணர்வே
தாகமமும், ஆண்மை கொண்ட
வாளாளர் வாகைகளும் வையத்தில்
வாழ்வாங்கு வாழுகின்ற
தாளாளர் தாராள வண்மைகளும்
திண்மைகளுந் தழைப்ப தெல்லாம்
வேளாளர் கலப்பை முனைத்தவத்தாலே
என்று நாம் விரும்புவோமே

வையகத்தில் வாகீசர் திருமூலர்
மெய்கண்டார் வள்ளலார் நல்லூராரும்
துய்யபல புலவர்களும் வேளாள
மரபினிலே துலங்கியிங்கே
செய்ய தமிழிலக்கியமும் சிந்தாந்தச்
செந்நெறியுந் திகழ வைத்தார்
உய்யவரு வானமுதும் விளைநிலமும்
உள்ளவரை ஓங்கிவாழ்க!

நிலமோங்கத்தல மோங்கப்பயிரோங்க
பசு வோங்க நிலவுயிர்கள்
நலமோங்க நாடோங்க நல்லகலை
வளமோங்க நலவிலாது

புலஞேங்கப் பொன்ஞேங்கப்பொருளோங்க
அருளோங்கப் புலமை யோங்கக்
குலஞேங்கு வேளாளர்குவித்திடுநெற்
குவையோங்க வாழ்த்துவோமே

சப்பானின் உழைப்புடனே சுசர்லாந்தர்
ஒருமையுடன் உருசியாவின்
ஒப்பரிய கல்வியுடன் ஆங்கிலரின்
ஓங்கிவளர் வீறுங்கொண்டே
செப்பரிய அமெரிக்கர் செல்வமுடன்
செருமனியர் திண்புங்கொண்டே
ஒட்பமுடன் செந்தமிழர் உள்ளோங்கி
உலகோங்க வாழ்க மாதோ.

*

# 37. பொலிப் பாட்டு

பொலிவான பூமியிலே — ஐயா
பொன்ஞன நெல்விளேப்போம்
மலிவாக உண்டுடுத்தி — மக்கள்
வாழ உழைத்திடுவோம்

வானம் பொழியுதையா — இந்த
மண்ணும் விளேயுதையா
தேனும் பொழியுதையா — இனித்
தின்னக்குறையு முண்டோ?

அம்மாபிச்சை யெனவே— ஏழை
அலறப் பொறுப்போமோ
சும்மா இருந்துண்ணும்- வீண்
சோம்பேறியாரினிமேல்

அரண்டே அடிபணியும் - ஏழை
அழுங் கண்ணீர் காண்போமோ
சுரண்டிச் சுரண்டியுண்ணும் — கள்ளத்
துரையின் செருக்குமுண்டோ
சொத்தை முறுக்குமுண்டோ?

வானக்குடை நிழலில் — மெய்
வருந்தி யுழைத்திடுவோம்
தேனுக்கு வண்டெனவே - புவிநம்மைத்
தேடிக் குலாவிடுமே

✶

முன்னேற்றப் பாடல்

## 38. தொழிற் கும்மி

முத்தொழி லாளி படைத்த வுலகினை
முற்ற வளர்க்கும் உபகாரி
கைத் தொழிலாளி களிப்புற வாழ்கெனக்
கைகொட்டிக் கும்மி யடித்திடுவோம்

வீடு நலம்பெற வீதி நலம்பெற
வீர விடுதலை வெற்றிபெற
நாடு நலம்பெறப் பாடு படுகின்றன
நல்ல தொழிலாளி வாழியவே!

வாருங்கள் ஆண்பிள்ளைச் சிங்கங்களா
வாழ வறுமையை ஓட்டிடுவோம்
பாருங்கள் பற்பல நாடுகளை — நாமும்
பாய்ந்துமுன் னேறப் பணிபுரிவோம்

நாட்டுக்கு நல்ல வளமை யுண்டாம் — உங்கள்
நாடிக்கு நல்ல திறமை யுண்டாம்
வீட்டுக்கு நல்ல விளைவு முண்டாம் - வாரீர்
வேலைக்குத் தக்கதோர் கூலியுண்டாம்

மேடைமினுக்குகள் செய்துவிட்டீர் — அச்சு
விளம்பரங்களும் எய்தி விட்டீர்...
ஆடை யுணவிற்குத் திண்டாட்டம் - எனில்
ஆண்பிள்ளை காள் என்ன கொண்டாட்டம்...?

அன்னியர் யந்திரம் வாங்கு கின்றீர் - அதை
ஆக்குவோம் என்றுற்பின் வாங்குகின்றீர்!
பொன்மலை யைக்கடல் கொட்டுகின்றீர் - வீட்டிற்
போதுபோ காதுகை காட்டுகின்றீர்!

கட்சிச் சண்டைபல போடுகின்றீர் - பின்னே
காக்காய்க் கூட்டம் போலே ஓடுகின்றீர்,
உட்சினம் வைத்துற வாடு கின்றீர் - ஐயோ
ஒற்றுமை யின்றித்தள் ளாடுகின்றீர்!

காலத்தை வீணுய்க் கொலை புரிவீர் - பழங்
கதைகள் பேசிக் கொண்டேதிரிவீர்!
வேலைக்கு நாக்கை வழிக்கின்றீர் - சொன்னுல்
விதியை நொந்து பழிக்கின்றீர்!

வித்துண்டு நாட்ட நிலமுண்டு. நீருண்டு
வேட்டி நெய்யத்தறி ஓட்ட முண்டு
சத்துள்ள மூலப் பொருளுண்டு — நல்ல
சாத்திரங் கற்கத் திறமையுண்டு...

இரும்பு நிலக்கரி எண்ணெய்ச் சுரங்கம்
இயந்திர சாதன மெல்லாமுண்டு...
கரும்பு வெட்டிக் கடித்துண்ண மாட்டாது...
கையைப் பிசைந்து கலங்குகின்றீர்...

பாடுபட்டோருக்குத் தேடிவரும் பலன்
பாடப் பாடராகங் கூடிவரும்
ஏடு துளைத்தது போதுமினி - நாட்டீர்!
எழுந்து வாருந் தொழில் புரிய!

கப்பல் விடுவோம்.. கனிகளைத் தோண்டுவோம்
காற்றில் மின் சாரக் கனல் பிடிப்போம்...
ஒப்பரும் ரேடியோ அற்புதங்கள் செய்வோம்
ஒன்றிமுயலுங்கள் வன்றமிழீர்!

பஞ்ச பூதங்களும் கொஞ்சி யழைத்துப்
பயன்கள் வியன்பெறத் தந்துதவும்
நெஞ்சில் உரங்கொண்டு நேரத்தைப் பொன்னுக்கி
நீடு முயற்சிசெய் வீரருக்கே...!

ஓங்கி யுலகம் செழிப்புறவே - மாந்தர்
ஒடும் அருவிபோல் வாழ்ந்திடுவோம்...
தூங்கா தியற்கையைச் சோதித்துக் கோதற்ற
தொழில் செய் யோகத்தில் ஆழ்ந்திடுவோம்!

கையினிற் சக்தி, கருத்தினிற் சக்தியிக்
கண்ணில மெங்கிலும் சக்தி மயம்...
செய்கையிற் சக்தி, நம் சிந்தையிற் சக்தி - நாம்
சேர்ந்துழைத்தால் வரும் சக்தி ஜயம்

✶

## 39. கோபுரம் போல

**கரகரப்பிரியா** **ஆதி**

கோபுரம் போல நிமிர்வாய் — பலங்
கொண்ட நவயுக வீரா
சாபப் பழந்துய ரெல்லாம் — நீ
சாடி யழித்திடு தீரா [கோ]

தூண்டிய செஞ்சுடர் போலே — உன்
தோற்றம் விளங்கிட வேண்டும்
நீண்ட புகழ் பெற வேண்டும் — நின்
நினைவு செயல்பெற வேண்டும் [கோ]

கண்டதும் கைகுவித்துலகம் — உன்
கருணையைப் போற்றிட வேண்டும்
குண்டர் நடுங்கிட வேண்டும் — உன்முன்
கூற்றம் ஒடுங்கிட வேண்டும் [கோ]

தொத்தடிமைச்சிறை போக்கி — நல்ல
சுதந்தர வாழ்வினை ஊக்கி,
சத்திய நன்னெறி யாக்கி — ஜீவ
சாதனம் கனிதர வேண்டும் [கோ]

வேலியும் காவலும் கண்ணும் - தோட்ட
வேலைக்கு வேண்டுவ துறுதி,
ஞாலத்தில் அறத்தினை நாட்ட — மிக
நல்ல படைத்திரள் வேண்டும். [கோ]

★

# 40. கொலை மறுப்பு

**செஞ்சுருட்டி** **ஆதி**

கொலையும் புலையும் வேண்டாம் அண்ணமாரே
பலியும் பாபமும் வேண்டாம் அண்ணமாரே
உலகெலாம் கோயிலன்றோ அண்ணமாரே
உயிரெல்லாம் சாமியன்றோ அண்ணமாரே
கல்லுக்குக் கண்பிதுக்கி அண்ணமாரே
காளி கறுப்பனென்பீர் அண்ணமாரே
பூசை பலிகளெல்லாம் அண்ணமாரே
பூசாரி காசடியே அண்ணமாரே

மோசம் போகாதிருப்பீர் அண்ணமாரே
மூடப் பழக்க மிவை அண்ணமாரே
கூற்றுக்குப் பயப்படும் அண்ணமாரே
கொலைக்குப் பயப்படுவீர் அண்ணமாரே
நாற்றவுடலை யுண்ணல் அண்ணமாரே
நல்ல பகுத்தறிவோ அண்ணமாரே
ஆட்டை யறுத்த பாவம் அண்ணமாரே
ஆளை அறுக்குதையா அண்ணமாரே
மாட்டை வதைத்த பாவம் அண்ணமாரே
மனிதரை வாட்டுதையா அண்ணமாரே
புன்புலா லுண்ணுவதே அண்ணமாரே
போராய் வளருதையா அண்ணமாரே
அன்பு மனிதர் குணம் அண்ணமாரே
அஹிம்ஸையே நாகரிகம் அண்ணமாரே

✶

## 41. பசியும் விதியும்

**சேய்:** பசி பசி யம்மா — இனிப்
பட்டினி தாங்கேன்
பசி பசி தாயே — கொஞ்சம்
பழங் கஞ்சி போதும்

**தாய்;** பொறு பொறு மகனே - நலம்
பொறுக்கவே பிறந்தோம்
வறுமை நம் உரிமை - சொல்ல
வாயுமில்லையடா!

வேகும் வெய்யிலிலே -
விறகு தூக்கி விற்போம்
நோகும் பாழுடலே — மனிதர்
நூறு குறை சொல்வார்

அஞ்சு பணமென்ருல் கருமிகள்
அரைப் பணமென்பார்
கஞ்சிக் கவலேயிலே — நம்
கண்ணீர் பெருகுதடா

மழை வெயிலெல்லாம் - நமது
மண்மனே யுறவே
பழைய கந்தைகளே — நமக்குப்
பட்டுச் சரிகையடா

**சேய்:** ஏனம்மா உலகில் — நாம்
ஏழைக ளாஞேம்
ஏனம்மா சிலபேர் — நம்மை
ஏவிப் பணங் குவித்தார்?

**தாய்:** விதி விதி மகனே — தலே
விதி விதி மகனே!

**சேய்:** விதியைக் காட்டிடம்மா - அதை
வெட்டிப் புதைக்கின்றேன்.

✶

## 42. ஏன்?

**உசேனி** **ஏகம்**

இந்த வுலகினிலே - பலர்
ஏழைக ளாவானேன்?
கந்தையுங் கஞ்சியுமே - யின்றிக்
கண்ணீர் விடுவானேன்?

வீட்டை யமைத்திடுவோர் — நடு
வீதியில் வாழுவதேன்?
தோட்டப் பயிரிடுவோர் - நிதம்
சோற்றுக்கு வாடுவதேன்?

கற்ற கவிமணிகள் - இரத்தக்
கண்ணீர் விடுவானேன்
விற்ற வியாபாரி
விமானம் விடுவானேன்

கனிகளில் இறங்கித் — தங்கக்
கட்டி யெடுத்தளிப்போர்,
பனிமழை வெயிலில் - வருந்திப்
பசி தவிப்பானேன்?

பாடு படாதவர்கள் - உலகில்
பல்லக்கி லேறுவதேன்?
ஓடி யுழைப்பவர்கள் - மனம்
ஒடிந்து சோர்வதுமேன்?

ஒருவன் மண்ணுசை — பலர்
உயிரை வாங்குவதேன்?
இருவினை யுலகின் - போக்கை
எண்ணி வருந்துகின்றேன்.

★

## 43. தன்னுதவி

**பேஹாக்** **மிஸ்ர ஏகம்**

கையில் பலமிருக்க - பல
காரியங்கள் இருக்க - இன்னும்
உய்யும் வழியிருக்க — சும்மா
ஊழ்வினை யென்பாரோ?

சொந்த மனையிருக்க - விலைச்
சோற்றை யிரப்பாரோ? - தெய்வம்
தந்த மதியிருக்க - வீண்
சஞ்சலங் கொள்வாரோ?

தன்கை தனக்குதவி – என்பர்
சத்திய வீரர்களே - உயிர்
அன்பை வளர்த்திடுவார் - அவர்
ஆண்மைக் கனல்பெறுவார்

தீரர் முயற்சியினில் - செல்வத்
திருமகள் இருப்பாள் - அவர்
பாரினை வென்றிடுவாள் - வெற்றிப்
பண்கள் முழங்கிடவே,

✶

## 44. கையுழைக்க வேண்டும்

கையுழைக்க வேண்டும் - அதிற்
கருத்து வைக்க வேண்டும்
பையுறங்குஞ் செல்வம் - பல
பண்டமாக வேண்டும்
செய்யுழுது பயிர்செய் - ஏழை
சிந்தை யற்று வாழ
வையகத்தின் விளைவைப் - பொதுவாய்
வகுக்கு நீதி வேண்டும்
பாடு பட்ட வர்க்கு - நல்ல
பலன் கிடைக்க வேண்டும்
நாடு தந்த செல்வம் - சொந்த
நாடு துய்க்க வேண்டும்
வாடு மேழை வாழ - செல்வர்
வண்மை வளர வேண்டும்.

★

# 45. கோனார் பாட்டு

(புன்னாக வராளி) (ஆதி)

ஊதும் புல்லாங்குழலைக் கோனாரே - இந்த
உலகெலாம் பால்பொழியக் கோனாரே
போது புலர்ந்த தையா கோனாரே - பசும்
புல்மணம் வீசுதையா கோனாரே!

கட்டவிழ்த்து விட்டுவிட்டான் கோனாரே - மாயக்
கண்ணன்வந்து மாடுகளைக் கோனாரே!
வெட்ட வெளிப்புலனில் கோனாரே - மந்தை
மேய்க்கப் புறப்படுவோம் கோனாரே!

தெள்ளமுதஞ் சுரந்திடப் பசுக்களெல்லாம்-நன்றாய்
செழித்துப் பருக்கப்பசுந் தீனி கொடுப்போம்
துள்ளிளங் கன்றுவிளை யாடிவரவே - இன்பச்
சுதந்தரப் பாட்டொலிப்போம் கோனாரே!

கள்ளப்புலி நடுங்கக் கோனாரே - சுற்றுங்
கண்விழித்துக் கொம்பொலிப்போம் கோனாரே
குள்ளநரி மெல்லவரும் கோனாரே - பறை
கொட்டிக் குடல்கலங்க விரட்டிடுவோம்

மாதம் மும்மாரிபெய்யக் கோனாரே - பசு
மடி பால்சுரக்கக் கோனாரே
மேதினி கோகுலமாகக் கோனாரே - கண்ணன்
வீடுதோறும் விளையாடக் கண்டு களிப்போம்.

★

# 46. கள்ளுச் சனி

(செஞ்சுருட்டி) (ரூபகம்)

கள்ளுக்கடைப் பக்கம் போகாதே - அண்ணே
காலைப் பிடித்துன்னைக் கெஞ்சுகிறேன்
சள்ளை மிகப்பல செய்யுமப்பா - நடுச்
சந்தி சிரித்திட வைக்குமப்பா...! [கள்ளு]

நஞ்சினும் பொல்லாத கள்ளுச்சனி - ஊனை
நாறிக் கிடக்கின்ற கள்ளுச்சனி...
வஞ்சப் பகாசுரன் கள்ளுச்சனி - கொல்லும்
வாளினுந் தீயது கள்ளுச்சனி...! [கள்ளு]

பித்துப் பிடித்து நடுத்தெருவில் - கண்ட
பேரெல்லாம் பெப்பெப்பே யென்று சொல்லத்
தத்தித் தடுமாறிச் சாக்கடையில் விழத்
தள்ளுமப்பா கெட்ட கள்ளுச்சனி...! [கள்ளு]

பச்சை பச்சையாகப் பேசுமப்பா - வாடை
பட்டாலும் உன்குலம் நாசமப்பா...
பிச்சை யெடுத்திட வைக்குமப்பா - உன்
பிழைப்பில் மண்ணள்ளிப் போடுமப்பா...;
[கள்ளு]

கொண்டாட்டங் காட்டிக் குழியினி — லேயுன்னைக்
கொண்டுதள்ளிப் பாம்பாய்க் கொத்துமப்பா..
பெண்டாட்டி தாலி பிடுங்குமப்பா - பெற்ற
பிள்ளையைக் கொல்லத் தொடங்குமப்பா...!
[கள்ளு]

வீடு பசியினல் வாடையிலே - கட்ட
வேட்டியி ல்லாதுதிண் டாடையிலே...
பாடுபட்டு வந்த கூலிப்பணத்தைநீ
பாழுங் கிடங்கிலே போடுவதோ...! [கள்ளு]

கள்ளுச்சனி முகம் பாராதே — நாலு
காசுபணங் கையில் சேருமப்பா
பிள்ளை குட்டிகள் பிழைக்குமப்பா — மனப்
பேயும் அடங்கி உழைக்குமப்பா! [கள்ளு]

★

# 47. தேசமும் - பாசமும்

**செஞ்சுருட்டி** **ஆதி**

தேசம் எமதுமனப் பாசம் - அது
தெய்வப் பொலிவுபெற வேண்டும்
ஓசைக் கடல்முரசம் போலே — இதன்
ஓங்கும் புகழ் முழங்க வேண்டும்

கட்டுங் கவலைகளும் ஒழிய - துன்பக்
கண்ணீருங் கம்பலையுந்தீர,
சொட்டும் வேர்வையுடன் உழைக்கும்-ஏழைத்
தொழிலாளர் சுகமுற வேண்டும்

அதஞ்செய் அடிமைநர கொழியப் - பாழும்
அச்சப் பேய்நடுங்கி யோட
சுதந்தர வீறுபெற வேண்டும் - எங்கள்
சொல்லைச் செயலாக்க வேண்டும்

கல்விக் கதிர்பரவ வேண்டும் - நல்ல
கலைசெய் புலவர் மிகவேண்டும்
செல்வத் திரள் செழிக்க வேண்டும் - நல்ல
திருக்கள் பெருகிவர வேண்டும்

போரின் கொடுமைகளைப் போக்க - இந்தப்
பூமியில் அமைதியுண்டாக்க
பாரத சக்தி யெனும் பருதி - எங்கும்
பளிச்சிட் டொளிபரவ வேண்டும்.

# 48. செல்வத் தொழில்

செல்வத் தொழில் புரிவோம் - நாம்
சேமமுற இந்தப் பூமி நலம்பெறக்
கல்விக் கடல் கடப்போம் - நல்ல
காவியம் ஓவியம் கைத்தொழில் வாணிகம்
பல்வகையந்திரங்கள் - பூத
பௌதிகசக்திப் புதுமைகள் காணுவோம்
எல்லையில்லா அறிவால் - வானை
எட்டி நம்பட்டினம் கட்டிப்பெருகுவோம்
இன்பத்தொழில் புரிவோம்

பாட்டுத் தொழில்புரிவோம் - அதன்
பண்ணிற் புதுப்புது விண்ணழகோங்கிட
ஏட்டுத் தொழில் புரிவோம் - மதி
எட்டுமட்டும் கலையின்பத்தையாவர்க்கும்
ஊட்டுந்தொழில் வகுப்போம் - என்றும்
உயிரை வளர்க்கும் பயிரை வளர்த்திங்கே
தோட்டத் தொழில் புரிவோம் - ரப்பர்
தோட்டத் தொழில் - கனித்
தோட்டத் தொழில் புரிவோம் - தாய்
நாட்டுத் தொழில் புரிவோம்

தாவும் அருவியிலே - மின்
சாரஞ் சுழன்று தணல் பெறச் செய்குவோம்
பூவுள்ளகழ்ந்திடுவோம் - வெள்ளி
பொன்மணிசெம் பீயம்
எண்ணெய் யூரேனியம்
தேவையளவெடுப்போம் - எட்டுத்
திக்கும் அணுவிசை முட்டிப் பறக்கவே
தேவருலகுடனே - மாந்தர்
திருமணங்கூடித் திருவுறச்செய்குவோம்
தெய்வத் தொழில் புரிவோம்

யோகக் கலையுடனே - கூடி
    உலக விஞ்ஞானக்கலைகள் வளரவே
போகக் கலையுடனே - சிவ
    போதமிணைந்த புதுயுகமாக்குவோம்
தேகக்கலையுடனே - ஆன்ம
    தீரமுங் கொண்டிங்கு
    தெய்வ மனிதராய்
ஏகக்கலை வளர்ப்போம் - நம்
    இதயக்குகையினில்
    இன்பத்தைக் காணுவோம்

வெள்ளிப் பனிமலைமேல் - நாம்
    வெற்றிக்கொடிநட்டு வீரமுரசுடன்
பள்ளுக் கொட்டிக் குதிப்போம் - அந்த
    பால்வெண்மதி மண்ட
    லத்திலும் சென்று நம்
வள்ளுவர் சொன்னவழி - நன்கு
    வாழ்வாங்கு வாழும்
    மரபினையாக்குவோம்
அள்ளும் அமுதிசையால் - சுத்
    தானந்தக் காவியமாகிட யோகத்தால்
ஆன்மத்தொழில் புரிவோம் - இங்கே
        அமரக்கலை வளர்ப்போம்.

✱

## 49. பாட்டாளர் வெற்றி

(காபி) (ஏகம்)

வெற்றி வெற்றி வெற்றி யென்று
    வீர ராக முன்செல்வோம்
நெற்றி வேர்வை சொட்டச் சொட்ட
    நின்றுழைத்த நேயர்காள்! [வெற்றி]

போட்டி யின்றிப் பாடுபட்டுப்
பூமியைத் திருத்துவோம்
தோட்டி தொட்டு மன்னர் மட்டும்
தொண்டர் சேனை யாக்குவோம் [வெற்றி]

ஒற்றுமையும் உண்மை யன்பும்,
ஊக்கமுள்ள சேவையும்
குற்ற மற்ற தூய வாழ்வுங்
கொண்டு தொண்டு செய்குவோம் [வெற்றி]

பஞ்சை மக்கள் வேலைசெய்தும்
பட்டினி கிடப்பதே ..
கஞ்சி யின்றி ஏருழுத
கந்தன் கை பிசைவதோ...? [வெற்றி]

வீடு கட்டும் தச்சர் கொல்லர்
வீதியிற் படுப் பதோ?
காடு காக்கும் வேலன் பொங்கக்
கட்டை யின்றிக் காய்வதோ? [வெற்றி]

நீடு தோட்டம் காத்தவர்
நிழலில்லா திருப்பதோ?
ஏடு கற்ற வித்து வானும்
ஏங்கி யேழை யாவதோ? [வெற்றி]

வருத்தமின்றி வேலை யேவி
வாரிக் கட்டிப் பூட்டியே
ஒருத் தன் வாழ ஊர்வளைக்கும்
காலம்ஓடிப்போனதே... [வெற்றி]

பெட்டி கொண்டு யாருமே
பிறந்த தில்லை பாரிலே
கட்டிக் கொண்டு போவதில்லை
கால வெள்ளந் தன்னிலே! [வெற்றி]

சூரியனும் சந்திரனும்
சூழு நல் லியற்கையும்,
மாரியும், விளே வயலும்,
வஞ்சனேகள் செய்யுமோ? [வெற்றி]

தொல்லு லகில் யாருமே
தொழில் செய்கர்ம வீரராய்ப்
புல்லியற் பொருமை யின்றிப்
போது மட்டும் துய்த்திடின் [வெற்றி]

கல்வி யென்னும் சூரியன்
கதிரொளி பரவிடின்'
செல்வரில்லே ஏழையில்லே
சேவ கரும் இல்லேயே .. [வெற்றி]

தரகரின்றித் தன் னுழைப்புந்
தன் மதிப்பும் ஓங்கினல்
விரச மான வர்க்க பேத
வேற்று மைகள் ஏதடா? [வெற்றி]

சரிச மான மாக மாந்தர்
சங்க மொன்றி வாழ்ந்திடின்
அரசனில்லே, ஆண்டி யில்லே
அடிமை யென்ப தில்லேயே! [வெற்றி]

எட்டுத் திக்கும் அச்சமில்லே
என்று பேரி கொட்டுவோம்
எட்டுத் திக்கும் ஏழை யில்லே
என்று வண்மை நாட்டுவோம்! [வெற்றி]

எட்டுத் திக்கும் சாதி பேதம்
இல்லே யென்று செய்குவோம்
கட்டில்லாத காற்றைப் போல
கவலேயற்று வாழுவோம்
வாழுவோம் — அன்பு
சூழுவோம். [வெற்றி]

# 50. எல்லோரும் கல்வி கற்போம்

(செஞ்சுருட்டி) (திரிபுடை)

எல்லோரும் கல்விகற்போம்
இனிய தமிழ் அன்பீர்
கல்வியில்லார் உலகினிலே
கடையரெனத் தாழ்வார்

எண்ணெழுத்தும் கண்களென்றே
இயம்புகின்றார் புலவர்
கண்களின்றி வாழ்வினிலே
காட்சியின்பம் உண்டோ?

திருவுடைய கல்வியில்லார்
தேக நல மில்லார்
இருளுடைய வீட்டினிலே
இன்பம்என்றும் உண்டோ?

ஆளழகும் அணியழகும்
அறிவழகுக் கிணையோ?
தோலழகால் யாதுபயன்?
சுவையழகே கனியாம்

நல்ல நல்ல நூல்கள் பல
நயமுடனுண்டிங்கே
சொல்லறியா ஊமரெனத்
தோன்றலுமக்கழகோ

வீடுதொறும் கல்வியெனும்
விளக்கேற்றி வைப்போம்
வாடுகின்ற மன்னுயிரின்
வறுமையினைத் தீர்ப்போம்

எண்ணறிவீர் எழுத்தறிவீர்
இயற்கலைகள் அறிவீர்
பண்ணறிவீர் பயனறிவீர்
பதி நூல்கள் அறிவீர்

புல்லியவை போயொழியும்
புண்ணியங்கள் பொலியும்
நல்லதெல்லாங் கல்வியினால்
நயந்துவரும் வாழ்வில்

பொன்னளிக்கும் பொருளளிக்கும்
புவியின்பம் அளிக்கும்
சன்மார்க்க வாழ்வளிக்கும்
சமயோகக் கல்வி

கற்கைநன்றே கற்கைநன்றே
கைப்பிச்சை யேற்றும்
கற்றவர்க்கே வெற்றியுண்டு
கல்விகற்க வாரீர்!

★

## 51. தொண்டர் பாட்டு

(புன்னாகவராளி) (ஆதி)

தொண்டுகள் செய்திடுவோம் — பொதுநலத்
தொண்டுகள் செய்திடுவோம்
வண்டுகள் போலச் சுறுசுறுப் பாகவே
வாழுவோம் தோழர்களே [தொ]

ஊருக்கு நன்மை செய்ய - இந்த
உடலுக்கு நன்மை தரும்
ஆருக்கும் அன்புடன் இன்பம் பெருகவே
அமைதி வளர்ந்திடவே [தொ]

ஒற்றுமைக் கோயிலிலே - மனம்
ஒன்றிப் பணிபுரிவோம்
கற்றுணர் காரியம் வெற்றியடைந்திடக்
கடவுளின் துணைபெறுவோம் [தொ]

நோய்களைத் தவிர்த்திடுவோம் - சாவை
நூறிடும் வீறுகொள்வோம்
தாயெனும் இயற்கையைச் சேயென நம்பியே
சாதனம் செய்திடுவோம் [தொ]

வேற்றுமைச் சண்டையின்றி - இங்கே
விதவித மதங்களின்றி
நாற்றிசை யுலகினை மாற்றிச் சமயோக
நகரெனச் செய்திடுவோம் [தொ]

தெய்வநிலை பெறவே — யோகத்
தீயை வளர்த்திடுவோம்
மெய்யொளி துலங்கிடப் பொய்யிரு ளகன்றிட
விண்ணரசைக் கொணர்வோம். [தொ]

✶

## 52. எங்கள் கை

உலகினை ஊட்டுங்கை எங்கள் கை
ஊருக் குழைக்குங்கை எங்கள் கை
நிலவுயிர் காக்குங்கை எங்கள் கை
நேரான தொழில்களைச் செய்யுங்கை

மண்ணை உழுவதும் எங்கள் கை
மரத்தை நடுவதும் எங்கள் கை
பண்ணை வளர்ப்பதும் எங்கள் கை
பாடுபடும் தொழிலாளர் கை

காட்டைத் திருத்திடும் எங்கள் கை
கட்டிடம் கட்டிடும் எங்கள் கை
நாட்டைப் புதுக்கிடும் எங்கள் கை
நல்ல தொழி லாளர் கையிதே

கொழுந்தினைக் கொய்வதும் எங்கள் கை-முதிர்
கொட்டை குவிப்பதும் எங்கள் கை
செழுந்திரு வாக்கலும் எங்கள் கை-சொல்லைச்
செயலாக்கி முடிப்பதும் எங்கள் கை

பொறிகளை ஓட்டிடும் எங்கள் கை
பொருள்பல செய்திடும் எங்கள் கை
அறிவையும் வளர்த்திடும் எங்கள் கை
அன்புத் தொழிலாளர் கையிதே

துன்பந் துடைப்பதும் எங்கள் கை
சுதந்திரம் தருவதும் எங்கள் கை
இன்பத் திருக்களை நல்கிடும்
எங்கள் கை சக்தியின் தங்கக் கை

ஆற்றல் அளிப்பதும் எங்கள் கை
ஆட்சி நடத்திடும் எங்கள் கை
ஏற்றம் பெறுவதும் எங்கள் கை
இவ்வுலகந் தொழிலாளர் கை

வாழியவே தொழி லாளர் கை
வாழ்வை யளித்திடும் வன்னக் கை
ஆழி யுலகினை ஆக்குங் கை - அதை
அன்புடன் கொஞ்சிக் குலாவுவோம்.

# 53. நல் வாழ்வு

நல்வாழ்வு நல்வாழ்வு நல்காய் - இந்த
ஞாலத் திறைவனே ஞானக் கொழுந்தே
எல்லார்க்கும் நல்வாழ்வு தருவாய் — எங்கள்
இதயக்குகை வளர் பொதுமைச் சுடரே!

நோயின்றி நூறுண்டு வாழப் - பல
நூதனக் கலை யின்பச் சாதனை சூழ
தாயன்பு நெஞ்சத்தில் ஊற — கோப
தாபப் பொறுமைச் சழக்குகள் மாற
நல்வாழ்வு நல்வாழ்வு நல்காய்!

கையிலே செல்வத் தொழிலும் — எங்கள்
கருத்திலே விஞ்ஞான மெய்ஞ்ஞான எழிலும்
மெய்யிலே பொது நலப்பணியும் - கொண்டு
மேலான நாலான புருஷார்த்த மோங்க
நல்வாழ்வு நல்வாழ்வு நல்காய்!

ஓங்கார வீணையைப் போலே — மலை
யுள்ளத்தினின் றோடும் வெள்ளத்தைப் போலே
நீங்காத காதலைப் போலே — ஆழி
நீரிலே கார்மழை யாதலே போலே
நல்வாழ்வு, நல்வாழ்வு வேண்டும்!

வீட்டுக்கு நல் வாழ்வு வேண்டும் - எங்கள்
வீதியில் சோதி விளையாட வேண்டும்
நாட்டுக்கு நல்வாழ்வு வேண்டும் - எந்த
நாளுமுன் கருணைக்கிங் காளாக வேண்டும்
நல்வாழ்வு நல்வாழ்வு நல்காய்.

# 54. தொழிலாழி வேர்வையிலே

தொழிலாளி வேர்வை யிலே
துலங்கு தப்பா பசுமை யெல்லாம்
அழகான தோட்ட மெல்லாம்
அமுதூறும் வயல்களெல்லாம்
தொழிலாளி இரத்தத்திலே தோன்றுதப்பா
தொழிலாளி உழைப்பாலே துலங்குதப்பா
நேட்டால் இலங்கை யெல்லாம்
நெற்றி வேர்வை சொட்டச் சொட்டப்
பாட்டாளி பாடுபட்டே
பச்சை வளங் குலுங்குதப்பா!
தொழிலாளி உலகத்தின் எழிலாளி!
தொழிலாளி எல்லார்க்கும் தோழனப்பா!
மழை, வெயில் பாராதே
மனம் நோக உடல் நோக
உழை நல்ல தொழிலாளி
ஊருக்குப காரியப்பா
நன்றாகப் பாடுபட்டு
நன்றாக உண்டுடுத்தி
நன்றாக வீடு கட்டி
நலமுடனே வாழியவே!...
பாட்டாளி எங்களுக்குக் கூட்டாளி...
பாட்டாளி உலகினையே ஆட்டாளி...

*

# 55. பால்வழிய

மரத்திலே பால் பொழிய
பாலிலே பணம் பொழிய
பணத்திலே குணம் பொழிய
குணத்திலே மனம் பொழிய
மனத்திலே மதி பொழிய
மதியிலே துதி பொழிய
துதியிலே பதி பொழிய
பதியிலே அருள் பொழிய
பரமானந்தமடா!

பால்பொழியப் பால்வழியப்
பணம் பொழியுதடா
பணத்தைக் கொண்டு பண்டம் வாங்கிப்
பகுந்துண்போமடா!
கால்கடுக்கக் கைகடுக்கக்
கஷ்டப்பட்ட பணம்
கட்டுச்செட்டாய்ச் செலவழித்தால்
கையில் மிஞ்சுமடா

உடல் வருந்த உயிர் வருந்த
உழைத்து வந்த பணம்
குடல்கரையக் குடித்துவிட்டு
குதித்து வீழாதே - குடித்த
குடியும் வாழாதே - அப்புறம்
குந்தியழாதே!

பச்சை முகம் வாடிடாது
பாதுகாப்போமே
உச்சமலை காடுவளம்
ஓங்கச் செய்வோமே

திண்ணையிலே வம்படித்து
திருந்த மாட்டோமே
பண்ணையிலே பாடுபட்டால்
வருந்த மாட்டோமே

வெண்ணெயிலே நெய்யெனவே
வேலையிலின்பம்
உண்மையிலே ஊருக்கின்பம்
உழைத்த வீரடா!
ஓட ஓட உலக வண்டி
ஓடி யுழைப்போம்
நாடுவாழ வீடுவாழ
நாமும் வாழுவோம்.

★

## 56. கால வினை

கருணையுள்ள மாரியம்மா
காலவினை தீராயோ
அருணை முக்திருவே
அன்பருக்கு நேராயோ!

அநியாயக் காலம்வினை அலட்டுது தாயே
ஆகாத பேய்வறுமை மிரட்டுது தாயே
கனியாத மனதினிலே கவலை யேறுதே
கலங்காதே என்றபயங் காட்டிடுவாயே-பயத்தை
ஓட்டிடுவாயே — அருள்
கூட்டிடுவாயே

அரிசியிலே பருப்புவிலே ஆனேவிலேயே
அலைந்தாலும் நயமாக அகப்படவிலேயே
சரிசமனுய் மண்ணைப் போட்டுச்
சரக்கு விற்கிருன்
சண்டாளப் பேராசைக்காரன்
கொள்ளையடிக்கிருன் [கரு]

பெரியபடிப்புக்காரனுக்குப்
பிழைக்கத் தெரியலே
பேச்சுமேடைப் புலிகளுக்கு
உழைக்கத் தெரியலே
அரிய புலமைக் கவிகளுக்கு
ஆடத் தெரியலே
ஆளுக்கேற்ற அடதாளம்
போடத் தெரியலே

வாயாடிக்குப் பேரும் புகழும்
வந்து முண்டுது
வஞ்சமற்ற பாட்டாளிக்கு
வயிறு கிண்டுது
காயிதத்திலே சட்டதிட்டம்
கண்ணைக் கவருது
காரியத்திலே தூக்கம் வந்து
கண்ணைச் சுழற்று

மனசைக் கெடுக்கும் மாயத்துக்கு
மவுசு கூடுது
மானங்கெட்ட பகட்டுக்கெல்லாம்
கூட்டம் கூடுது
கனத்த குரலில் டப்பாப்பாட்டு
காதைத் துளைக்குது
கதையைக்காணக் கதையைக்காண
மதியைக்கலக்குது

அரசியலில் ஓட்டுவேட்டை
ஆட்டம் போடுது
அணுக்கதிரால் உலகமெல்லாம்
அஞ்சி வாடுது
வரிப்பணத்தை குண்டுப்புகை
வாரிப்போகுது
வல்லரசு மல்லுங் கட்டிக்
கொல்லத் தாவுது—

ஆழியுலகில் வாழத்தெரியா
அணுவிஞ்ஞானியர்
ஆகாயத்தில் ஆட்சிநாட்ட
அவதிப்படுகிறார்
பாழிலலேயும் குழந்தைகளைப்
பரிவுகொண்டாளாய்
பரதேவதையே அபயம் அபயம்
பாரினைக்காவாய்.

*

## 57. கோவிந்தா!

ஏழுமலை ஆண்டவனே கோவிந்தா
ஏக்கந் தவிர்த்தருளே கோவிந்தா

வாழும் வகை வகுத்திடுவாய் கோவிந்தா
வயிற்றுக்கு வழி செய்வாய் கோவிந்தா

எட்டுப் படிப்பினிலே கோவிந்தா
ஏகாதசி புகுந்ததடா கோவிந்தா

கோட்டு முறுக்கினிலே கோவிந்தா
குமுறுதடா பசித் தீ நோய் கோவிந்தா

பட்டாவுக்கு வேலையில்லை கோவிந்தா
பாடுபடப் பலமில்லை கோவிந்தா

எட்டாத மலே ஏறி கோவிந்தா
இடுப் பொடிந்து போனதடா கோவிந்தா
சமுதாய வாழ்வினிலே கோவிந்தா
சாதி வந்து முட்டுதடா கோவிந்தா
அமுதான பேச்சினிலே கோவிந்தா
அகங்காரம் வெட்டுதடா கோவிந்தா
அடுப்பங் கரையினிலே பூனேக்குட்டி
ஆயாவுடன் ஆடுதடா கோவிந்தா
நடுப்பகல் இரவெல்லாம் வீட்டினிலே
நல்ல தங்கை நாடகமே கோவிந்தா
கோவிந்தா படிப்புந்தா பட்டமுந்தா
கோவிந்தா சாதந் தா! சாதந் தா! தாதா!

★

## 58. கப்பல் பாட்டு

(இராகம் வராளி) (தாளம் ஜம்பை)

ஏலேலோ ...ஏலேலோ.. சுப்பையா
ஏலேலோ......ஏலஏலோ......
பால் போலே பொங்குதிரை...ஐலசா
பாய்ந்துவிளே யாடுகின்ற.. ஐலசா
சேல் போலே சுறுசுறுப்பாய்.. தத்தையா
சேர்ந்து கப்பல் ஓட்டிடுவோம்

கால வெள்ளம் குமுறுதப்பா...நல்ல
காற்றடிக்குங் காலேயிலே ...ஐலசா
வேலப்பன் துணையெனவே... தனலக்ஷ்மி
வெற்றிபெறத் துடுப்பெடுப்போம்

மங்களக் கீதமொடு மணமாதர் வாழ்த்த
மத்தளந் தாளங்கள் தத்திமி முழங்க
சங்கங்குழல் கோட்டு ஜலதரங்கம் யாழ்
ஸப்த ஸ்வரங்கள் கிணீரெனப் பேச
தங்கச் சிலம்பொலி கலீர் கலீரென்னத்
தளிரிளம் பூலோக ரம்பையர்கள் ஆட
துங்கமிகுயோகமுனி வோர்கள் மறையோத
சுரநாத வெள்ளத்திற் சொக்குதடாகப்பல்
ஏலேலோ-ஏலேலோ

தன்னுன தானுன தந்திமிதோம்
ததிங்கிணதோம் தரிகிடதோம்
தகஜணுதோம்—முருகையா
சுந்தரமாம் செந்தமிழர் கப்பலப்பா
சுதந்திரமாய் குப்குப்பெனச் செல்லுதப்பா
அந்தமாக அந்தமான் நிக்கோபார்
அழகுபெற ஆனந்தமாய்த் தவழுதப்பா

சென்னையிலே சரக்கெடுத்து - முருகையா
செகமெல்லாம் விற்றுவரும் கப்பலடா
பொன்னுறு பொங்கவரும் கப்பலடா
பொருளுடனே அருள்விளங்கும் கப்பலடா

அலைமோதும் புயலடித்தும் — பரமசிவம்
அஞ்சாதே முன்செல்வோம் - ஆறுமுகம்
கலைமோதும் ஆவேசப் பாட்டினிலே - ஜலசா
கவலையறச் செல்லுதப்பா கப்பலம்மா
இன்பவளப் பசுங்கோவில் பால்சுரக்க
ஈகைமிகுங் கனிமரங்கள் எழில் சுரக்க
தென்னைபலா மாவாழை தேன்சுரக்க
தேசநலம் பெருகிடவே வான்சுரக்க [தன்]

நவமணி தங்கநகை தந்தவகை
முறுக்கான பட்டுவகை சரிகைவகை
கத்தூரி கமகமெனு வாசவகை
காட்டான மிளகேலம் கொண்டு செல்வோம்

ஆதிபரா பரன் புதல்வர் யாவருமே
அன்பான ஒருகுலமாய் வாழ்ந்திடவே
மேதினியில் ஆன்மநேயம் விளங்கிடவே
வெற்றிக் கொடி பிடித்தே வீரர் செல்வோம்

ஒற்றுமை முரசதிரத் தள்ளுடா தள்ளு
உலகெலாம் ஒன்றெனத் தள்ளுடா தள்ளு
வெற்றிவேல் வெற்றிவேல் வெற்றிவேல் எனவே
வீறுடன் பேரின்பம் விம்மிடத் தள்ளு

பற்றலர் நடுங்கவே பாய்ந்து நீ தள்ளு
பகை போர் ஒடுங்கவே பண்புறத் தள்ளு
சுற்றிலும் ஜயசுத்தசக்தி யொளி வீசச்
சுத்தானந்தத் துறையைத் தொட்டதடா
கப்பல்

ஏலேலோ — ஏலஏலோ — சுப்பையா
ஏலேலோ — ஏலஏலோ.

✶

## 59. கன்னித் தமிழிசை

கன்னித்தமிழிசை மின்னிப்பொலியக்
காசினி யெங்கெங்கும்
பொன்னிச் செல்வம் வைகைச் செல்வம்
பொங்கிப் புகழ் பெறுமே

திருமாவளவன் செங்கோலோச்சிய
செந்தமிழ் நாடிதுவே
அருகன் புத்தன் அரிகர முருகன்
அருளும் வீடிதுவே
ஆடல் பாடல் அழகுச் சித்திரம்
ஆயிரந் தொழிலிங்கே
கூடிக்குழையுங் கொற்றக்கலைவளர்
கோயில் நந்தாயில்!
வங்கம் வந்தும் வங்கம் சென்றும்
வணிக வளம் பெருகித்
தங்கம் பொழியும் தருமஞ் செழியும்
சங்கம் பொலி நாடே
வெற்றிக்கொடியுடன் கொற்றத்திருமிகு
வீரர் நடந்திடுவார்
சுற்றிப் பேரிகை கொட்டிச் செயமலர்
தூவி மகிழ்ந்திடுவார்
தோழமை கொண்டே தொல்லுலகிற்குத்
தொண்டு செய் தமிழகமே
ஆழியும் வானும் ஏழிசையோத
வாழிய வாழியவே.

✱

## 60. பள்ளித் தொழில்

கள்ளத்தை மாற்றி வீரக்
கனலினையேற்றி யான்ம
உள்ளத்தைத் துலக்கி நெஞ்சில்
ஒருமையை உணர்த்துங்கல்வி
வெள்ளத்தைப் போலநல்கும்
வித்தகர் நடத்துகின்ற
பள்ளியே பண்பு மிக்க
பாருயிர் நிலையமாமே

தவநிலை கண்டோரேனும்
தவத்தனலாலே தூய
சிவநிலை கண்டோரேனும்
செகத்தினையாண்டோரேனும்
அவநிலை மாறப்பாரில்
அருட்பணி புரிந்தோரேனும்
நவநிலை நல்குமாசான்
நல்கிய சீடர் தாமே

அரசினரேனும் பற்பல
அலுவலரேனும் கற்ற
பரவசக் கலைஞரேனும்
பலமொழிப் புலவரேனும்
முரசடித்தழைத்தேன் ஆசான்
முன்னிதம் வணங்கிடுங்கள்
சிரசென நாட்டுக்கெல்லாம்
சிறந்தவர் குருமார் வாழ்க!

★

## 60. பச்சைப் பசுங்கோயில்

(திலக்) (தாளம் ஆதி)

பச்சைப் பசுங்கோயில் — இன்பப்
பண்ணை மலைநாடு
இச்சைக் குவந்த நிலம் — என்
இதயம் போன்ற நிலம்

ஓங்கி உயர்ந்த மலை — அங்கே
ஓடி வரும் அருவி
நீங்காத சொக்கழகு — அதில்
நீந்தும் சிவ மணமே

பூவுங் கனிவளமும் — எங்கும்
பொன்னும் திரு வனப்பும்
நாவு துடிக்குதம்மா இந்த
நாட்டினைப் பாடிடவே.

வாழிய தாய்த்திருநாடு — எங்கள்
மனமகிழ் மங்கள வீடு
ஆழியின் முரசொலி முழக்கம் - அதில்
அணைந்திடும் மேற்குடன் கிழக்கும்
இந்தியர் கிறிஸ்துவர் பௌத்தர் - தீன்
இஸ்லாமியருடன் இணைந்தார்
சுதந்திரக்கனி வளர்தோட்டம் - பால்
சுரந்திடுந்தேன் பொழிநாடே - பல
தொழிலிசை பொன்பொழிநாடே
கலந்துயிர் களிப்புடன் வாழ - வழி
காட்டிடும் ஆனந்த வீடே
நலந்தரு திருஸாளிர் நாடே - ஓம்
நம்முயிர் துடித்திடு நாடே.

★

# 61. பொன்னிலங்கை

எங்கள் பொன்னிலங்கை வாழ்கவே - பூவின்
இதய கமலம் என்ன வாழ்கவே!
மங்கலங்கள் பொங்கிப் பொலிகவே - அங்கு
மக்களெல்லாம் ஒத்து வாழ்கவே

தென்கடலின் மார்பகத்திலே
செழும் பசும் பதக்கம் போன்றதே
அன்பமுதசுரபி போன்றதே - மணி
யணிந்த பல்லவமும் போன்றதே

சித்தரவியற்கை சூழவே - வீர
ஜெயமணிக் கொடிகளாடவே
நித்திலக்குவை நிலாவவே - செல்வி
நிருத்தமாடும் சோலையாகவே [எங்]

தேசுலாவு நால்வர் சொலும் - சைவத்
திருவுலாவும் அருமறைகளும்
ஏசுநாதர் சிலுவை சேவையும் -தீன்
இஸ்லாமியத்தின் இறையுறுதியும்

புத்தரின் கருணையுள்ளமும் - கொண்ட
புனிதமானதரும பீடமாய்
முத்தமிழ் முருகன்வீறுடன் - சுத்த
மூர்த்தியருளாற் கீர்த்தி சேரவே [எங்]

அலைகொழிக்குங்கப்பற் செல்வமும்
மலைகொழிக்கும் பசுவளங்களும்
கலைகொழிக்கும் அழகுச்செல்வமும்
இலகிவாழ்க இலங்கைச் செல்வியே. [எங்]

★

## 63. வாழிய ஈழம்

(இராகம் மோகனம்) (தாளம் ஆதி)

வாழிய ஈழம்! வாழிய ஈழம்!
ஏழிசையாழி வாழிகள் கூறவே [வாழிய]

வானமும் புவியும் வந்திதை வணங்க
ஞானமும் திருவும் தானமும் துலங்க [வாழிய]

பொன்மணி முத்தும் போகமும்பொலிய
கண்மணித் தமிழும் சைவமும்தழைக்க [வாழிய]

சீவர்க ளெல்லாம் சிவமயம் என்னும்
நாவலர் காத்த நன்னெறியிலக [வாழிய]

புத்தரின் சாந்தப் புன்னகை வீச
உத்தமர் காந்தியின் உள்ளமேபேச [வாழிய[

ஏசுவின் சேவையும் இஸ்லாம் உறுதியும்
மாசறு சமயோகமார்க்கமுமிணைந்தே [வாழிய]

எத்திசை நாடும் இதுவே நாடெனெ
ஒத்திசை கூறிட நித்தியச் சுடர்போல் [வாழிய]

பொங்கிடப் பழநலம் புதுநலம்பொலிய
மங்கலச் சிங்களம் மாசற வாழ்கவே [வாழிய]

*

## 64. நாவலர் வாழ்த்து

ஈழநாடெழுந்த சிங்கம்
இலக்கியப் புலவர் சிங்கம்
ஆழமாக் கடலைப் போலே
அறிவினை யுடைய சிங்கம்
சூழநந்த மிழுஞ் சைவத்
துறைகளும் உலகமெல்லாம்
வாழவே வாழ்ந்த சிங்கம்
வளம்பெற வாழ்க மாதோ

நாவலன் என்ற போதே
நாவெனக் கினிக்கும் உள்ளம்
ஆவலாய்ப் பால பாடம்
அருளிய பொருளைக் காணும்
ஓவறத் தமிழனுக்கு
உயிர்த்துடிப்பானன் சைவக்
காவலன் கந்தவேளின்
கனல் பெறு புலவன் வாழ்க!

கல்வியின் வரம்பு கண்டோன்
கடவுண்மாக் கலைகளெல்லாம்
வல்லவன் பிரமசாரி
வானெனத் தமிழ் பொலிந்து
செல்வமுந் திருவும் பொங்கச்
சிவநெறி செழிக்க வந்தோன்
நல்லவர் போற்று நல்லூர்
நாவலன் வாழ்க மாதோ!

தமிழினைப் புதுக்க வந்த
தத்துவப் புலவன் என்கோ
தமிழ்ப்பணி தனைமணந்த
தவமணிச் சைவம் என்கோ
தமிழிசை பரவவந்த
தாரகக் குழலே என்கோ
அமிழ்தினும் இனிய சொல்லான்
அழகிய நாவலோனே!

அச்சத்தைத் துறந்தான் உள்ளே
அரனையே நினைந்தான் மூவர்
சொற்சுவை யணிந்தான்; ஆன்றோர்
தொகுத்தநன் னூல்கள் வாழ
மெச்சுநற் பணிகள் செய்தான்;
வியன்றமிழ் வியாசன் என்றெம்
உச்சிமேல் வைக்கத்தக்க
நல்லவன் ஒளிர்க மாதோ!

★

# 65. வள்ளல்கள் வாழ்க!

தங்கமே யனையார் வீரத்
துணல்பெறு வீறுகொண்ட
சிங்கமே யனையார் சீவன்
சிவமயமாகப் பெற்றார்
இங்கிந்த வுடலைப் பெற்ற
இன்னிய பயனைக் கண்டார்
எங்கவர் இருந்தும் என்றும்
ஈகையால் இசைபெற்றாரே

பொன்னையான் கேட்டதில்லை
பொருளையான் கேட்டதில்லை
என்னையான் உருக்கி வார்த்தே
இரவின்றிப் பகலு மின்றி
முன்னைநூல் பலவுங்கற்றே
முதற்பெரு நூல்கள் செய்தேன்
இன்னரென் கலைச் செல்வத்தை
ஏற்றநல் லினியார் வாழ்க!

தூயராய் ஒருமை கொண்டு
துலங்கிடச் சமயோகத்தின்
நேயராய் உலக மாந்தர்
நிலவிட வுள்ளே கண்ட
வாய்மையைக் கவிதை செய்தேன்
வன்மையால் உலகுக் கீந்த
தாயனை யாரின் அன்புத்
தயவினை வாழ்த்துவேனே

அப்பரின் மரபிற் பூத்தோர்
ஆளுடைப் பிள்ளையாரின்
ஒப்பறுத மிழறிந்தோர்
உள்ளத்தில் ஒளியை வைத்தார்

இப்பெரும் உலகில் என்றன்
இதயத்தே துடிக்கும் அன்பைத்
தப்பறவுணர்ந்தோர் தாமே
தருணமா மழைபோன்றுரே

ஒருபெயர் வடிவுதாங்கி
உண்டுடுத்துலவு மாந்தர்
பெருமன விறந்துபட்டார்
பெட்புடன் அறத்தைநாடி
அருள்மனக் கவிகள் பூத்த
அரும்பெரு நூல்களுக்குத்
திருவினை யளித்த நல்ல
திருத்தொண்டர் வாழ்க மாதோ

✶

## 66. அச்சுத் தொழிலாளர்

அச்சுத் தொழிலாளர் வாழியவே - எங்கள்
அன்புத் தொழிலாளர் வாழியவே
மெச்சும் அறிவினை மேதினிக்கே நல்கும்
மேன்மைத் தொழிலாளர் வாழியவே

கம்பனெங்கே காளிதாசனெங்கே — வேத
கானமெங்கே விஞ்ஞானமெங்கே
நம்பரெங்கே நாயன்மாருமெங்கே - புது
நாகரிகம் அச்சு வாகனத்தே

புத்தகம் சித்திரம் பத்திரிகைக் கலை
புத்தம் புதிய புலமையெல்லாம்
வித்தகர் நல்லிசை வீரர் பெருஞ்செயல்
விளம்பக் கற்றதும் அச்சகத்தால்

ஈயத்தில் வேலைசெய் நேயரவர் - மூலை
யிருளில் வாடும் சகாயரவர்
தேயத்தை முன்னேற்றும் தூயரவர் - அவர்
செய்யும் தியாகத்திற் கெல்லையுண்டோ?

தகரக்கொட்டகை வேக்காடு - மின்
சார வெளிச்சத்தில் ஏற்பாடு
அகரமுதலான அச்சுத் தொழிலாளர்
அறிவுத் தொண்டு வெகுபாடு

எழுத்தெழுத்தாகக் கோத்தடிப்பார் - அதில்
எத்தனை அச்சுப்பிழை திருத்தம்
அழுத்திப்பாரம் அடிக்கையிலே - உடல்
அயருந்துயரைப் பொறுத்திடுவார்

கலையுலகத்துக் கண்மணிகாள் - உங்கள்
கையை முத்தமிட்டுக் கொஞ்சுகிறேன்
தலைசிறந்த உலகமணிகளின்
தங்கமலர்களைத் தந்தவர்காள்!

கண்ணைப் பறிக்கும் மின்சாரத்திலே — பாரம்
கட்டியடிக்கும் கருத்தாளர்
உண்ணவுடுக்க வுழைத்துப் பிழைத்திட
வுதவும் உத்தமர் வாழியவே

காலத்தை யாண்டிடும் பத்திரிகை - அதைக்
கண்ணுறங்காதிவர் கையளிக்கும்
ஞாலத்தை யாளும் வியன்களெல்லாம் -இவர்
நாளும் உழைத்த பயன்களெல்லாம்

கல்லும் கரையும் மனமுருகும் - இவர்
கடும் உழைப் பினைக் கண்டவுடன்
அல்லும் பகலும் அறிவுக் குழைத்திடும்
அன்பர்கள் வாழிய இன்புறவே

நல்ல வெளிச்சம் நறுமணக் காற்றுடன்
நல்லுணவுண்டு நலமுடனே
நல்ல திருவோங்கி நாளும் புகழோங்கி
ஞாலத்தொழிலாளர் வாழியவே - விஞ்
ஞானத் தொழிலாளர் வாழியவே.

*

## 67. பேனாத் தொழில்

உலகைத் திருத்துவது பேனா - மக்கள்
உள்ளம் உயர்த்துவது பேனா
நலத்தைத் துலக்குவதும் பேனா - இந்த
நானிலத்தை யாக்குவதும் பேனா
புரட்சியைத் தூண்டுவதும் பேனா — வீரப்
போரை நடத்துவதும் பேனா
வரட்சியைப் போக்குவதும் பேனா -புது
வசந்தத்தை ஆக்குவதும் பேனா
துன்பந் துடைப்பதுவும் பேனா - பொய்யைத்
துரத்தியடிப்பதுவும் பேனா
இன்பக் கதைகள் சொல்லும் பேனா - மக்கள்
இதயத்துடிப்பாக்கும் பேனா
முதுநலம் காப்பதுவும் பேனா - புவி
முன்னேறப் பார்ப்பதுவும் பேனா
புதுயுகச் சிற்பிகளின் பேனா - அதைப்
போற்றின் உலகுயருந் தானே
இரவும் பகலும் சிந்தை செய்தே- நல்ல
இலக்கியம் தந்த புலவர்
கரவின்றி மாபெரும் கலைஞர் — தம்மைக்
கைவிட்ட நாடு செழிக்காதே
இலக்கியப் புலவர் நாளும் - சும்மா
ஏமாற்றிச் செல்வம் குவிப்பார்
அலக்கணுற்றழிவது கண்டோம் - அன்பாய்
அள்ளித் தருபவர் வாழ்வார்!

பேனு முனையினிலே வாழ்வாம் - இந்தப்
பேனுவிருந்திடினே தாழ்வாம்
பேனு மகிழ்ந்து நடம் புரிந்தால் - வாழ்வு
பேரின்ப நிலை தரும் விருந்தாம்.

★

# 68. கவி எழுந்தான்

மணவிழா முழக்குகின்றோம்
மண்டபம் கட்டுகின்றோம்
அணிசிலை நாட்டுகின்றோம்
அலங்கரித்தணி செய்கின்றோம்
மணமலர் சூட்டுகின்றோம்
வருக நீ கவிஞ என்றார்
தணலெனக் கவிஞனுள்ளே
தனித்தவமினி தென்றானே!

வாகனங் கொண்டு வந்தோம்
வரிசைகள் வாரியிடுவோம்
ஊகநன்னூல் எமக்கே
உரிமை கொண்டடித்து விற்போம்
வேகமாய் வரா யென்றார்
வித்தகக் கவிஞனங்கே
யோகமே இன்பமென்றான்
உலகியலறிந்த ஞானி

வத வத வம்பினூடே
வந்தனன் அன்பனங்கே
சுதியுடன் கவிஞன் பாட்டைச்
சுவை பெறப் பாடிப்பாடி
நிதியுனதமுத வாக்கே
நெஞ்சமுன் காதலென்றான்
இதயமுந் திறந்த தாங்கே
இரவிபோற் கவியெழுந்தான்

இரவெலாம் நிட்டை கூடி
எழுதினேன் ஆயிரம் நூல்
வரவுடன் வெளியிட்டாரென்
வறுமையை உள்ளிட்டார்கள்
கரவுறக் குவித்ததில் ஓர்
காசுமீந் தறியார் அன்புப்
பிரமனின் அருளே என்னைப்
பாலிக்க வாழ்ந்திட்டேனே

எத்தனை ஏமாற்றங்கள்
எத்தனை சொல் மாற்றங்கள்
எத்தனைக் கருமிக்கல்லர்
ஈந்ததைத் திருப்பித்தாரரார்
இத்தகை யுலகில் என்னை
ஏகாந்தமாக்கி இன்னும்
சுத்த சக்திச் சுடர்க்கே
சுயங்கவி தொடுக்கின்றேனே

ஆர்த்திடும் அமளி வேண்டேன்
அணிமணி யழகும் வேண்டேன்
போர்த்து பொன்னுடை வேண்டேன்
புகலுறு மாலை வேண்டேன்
சேர்த்திடும் கவிதைச் செல்வம்
செகமெலாம் பரவ நீடு
காத்ததை யுதவும் அன்புக்
காதலர் வருக வென்றான்.

★

# 69. தேயிலைத் தோட்டத்திலே

தேயிலைத் தோட்டத்திலே - உடல்
தேய உழைக்கின்றோம்
ஆயா மகமாயீ - எம்மை
ஆதரி சோதரியே

கொட்டும் மழையினிலே - கடுங்
குளிர் பனியினிலே
வெட்டும் வெயிலினிலே — நாங்கள்
வேலை செய்துண் கின்றோம் [தேயிலை]

கட்டிடக் கந்தையுண்டு - கருங்
கம்பிளிப் போர்வை யுண்டு
பட்டினி நாட்களுண்டு - சின்னப்
பாழுங் குடிசை யுண்டு [தேயிலை]

காடு மலைகளிலே - எங்கள்
கண்ணீரைச் சிந்துகிறோம்
ஓடும் அருவியிலே - எங்கள்
ஓலத்தைக் கொட்டுகின்றோம் [தேயிலை]

தங்கத் தளிர் பறித்தே — கூடை
தழைத்திட நிரப்பிக்
கங்காணி கூலிதர — நாங்கள்
கஞ்சி வைத்துக் குடிப்போம்

பறித்த தேயிலையை - உலர்த்திப்
பாடஞ் செய் ஆலையிலே
பொறிகள் சுழன்றோடும் — அங்கே
பொங்கி வரும் பணமும்

அடித்திடும் கருவி — இடித்ததைச்
சலித்திடும் கருவி
பொடித்திடும் கருவி - கசடைப்
போக்கிடும் கருவி

வாட்டிடும் கருவி - நன்ருய்
வடித்திடும் கருவி — எல்லாம்
ஓட்டி உழைப்பவர்கள் — நாங்கள்
உண்மைத் தொழிலாளர்

இருட்டு மூலையிலே — சுடும்
யந்திர வாலையிலே
உருட்டும் ரோதைகளில் - எங்கள்
உயிரைத் தந்துழைப்போம்

கட்டி விற்றுப் பணத்தைக் - குவிக்கும்
கனக துரை யெங்கள் — குடிலை
எட்டிப் பார்க்கும் முன்பே — அம்மா
எம் குறை தீர்த்திடுவாய்! - நாங்கள்
இன்புற வாராயோ?

✶

## 70. டக்! டக்! டக்! டக்!

(தறிகாரர் பாட்டு)

(ராகம் மாண்டு) (தாளம் ரூபகம்)

டக் டக் டக் தறி ஓட்டம்
தன் மானத்தின் கொண்டாட்டம்
பட்டும் பஞ்சும் கம்பளியும் - அதில்
பாய்ந்து செல்லும் விளையாட்டாம்

செய்யுந் தொழில்கள் யாவினுமே
திருவள் ளுவரே சொல்லுகிறார்:
''நெய்யுந் தொழிலே மேலாகும்'' — தறி
நெய் குழலே செங் கோலாம்

திருவள் ளுவரும் தறி செய்தார்;
தீன கபீரும் தறி செய்தார்
அருளார் காந்தி தறிசெய்தார்
அன்பு விநோபா தறிசெய்தார்

குறையாச் செல்வம் கைத்தறியே
குடிசைத் திருவும் கைத்தறியே!
கரையா முதலும் கைத்தறியே
கவலை தீர்க்கும் கைத்தறியே!

நாவை நீட்டி மேடையிலே
நாட்டிய மாடிப் பலனில்லை
பாவை நீட்டித் தறிநெய்வீர்
பரவசமாகும் உயிர் வாழ்வே

சேலை வேட்டி துப்பட்டி
தீ வாளிக்குப் பட்டாடை
ஆலைக் கில்லா அழுத்தமுடன்
ஆக்கும் தறியை ஆதரிப்போம்,
[டக், டக், டக், தறி ஓட்டம்]

★

# 71. கைத்தறியாளர் வாழ்க!

கைத்தறியில் பாடுபடும்
கைகள் வாழ்கவே!
மெய்த் தொழிலில் உண்டுடுக்கும்
வீரர் வாழ்கவே!
வேலையுண்டு கூலியுண்டு
விசனம் ஏனினி?
சேலையுண்டு, வேட்டியுண்டு
செல்வச் சீருண்டு!
பெண்டுகளும் ஆண்களும்
பிழைக்க நல்வழி
கண்டுசுற்றும் சிறுவருக்கும்
காலரை கிடைக்கும்
பலர்வருந்தச் சிலர் பிழைக்கும்
பாப மில்லையே.
உலகமெல்லாம் கைத்தறியால்
உழைத்து வாழலாம்.
கல்லாரும் கற்றவரும்
கை யுழைப்பினால்
எல்லாரும் எல்லார்க்கும்
இனிது வாழலாம்.
ஏருடனே ராட்டை தறி
ஏந்தி மாந்தரே,
ஊருடனே ஒத் துழைத்தால்,
உலகில் இன்பமாம்!
மக்களுக்குச் சேமமுண்டு
மானங் காத்திடும்
கைத்தறியைப் போற்றிடுவோம்
காந்தி யாணையே.

★

# 72. நெசவுத் தொழில் வளர வழி

செய்யுந் தொழிலில் நெய்யுந் தொழிலே
சிறந்ததென்றூர் திருவள்ளுவரும்
மானங் காக்கும் மாண்புறு தொழிலாம்
நெசவுக்கின்று நேர்ந்ததைக் காணீர்
தாங்கா விலையில் வாங்குவார் நூலை
பாவு விரித்துப் பதமுறக் கஞ்சி
ஊட்டியதனைப் பூட்டித் தறியில்
கண்டைக் குழலிற் சுண்டியிழுத்தே
டக்டக் கென்று தாளமிட்டோட்டி
அறுந்த நூலைப் பொறுமையாய் முடித்தே
ஊடுநெய்ய வீடெலாம் உழைக்கும்.
அப்படி யுழைத்தும் அரைக் கஞ்சிக்கும்
கட்டுவதில்லை; கண்ணீர்! கண்ணீர்
ஏழை படுந்துயர் எண்ணவும் படுமோ?
மில்லரக்கனுடன் மல்லுக்கட்ட
முடியாக் கைத்தொழில முரண்பாடெய்தி
வருந்தும் விதியை வழுத்தவும் போமோ
ஓலைக் குடிலில் ஒன்பது பேர்கள்...
குழந்தை குட்டிகள் அழுந்துயர் என்னே!
ஆடை நெய்வோர்க்கு, ஆடையில்லை
வாழச் செய்வோருக்குக் கூழுமில்லை.
உழைக்குங் கையில் உரமும் இல்லை.
எத்தனை நோய்கள்! எத்தனை பேய்கள்
இத்தனை யிடர்களில் இயற்றிய சரக்கை
வாங்கப் பணமில்லை; வறுமை; வறுமை!
கதர் நூல் ஆடை கடுவிலை கடுவிலை!
நாட்டுப் பஞ்சை வீட்டு நூலாக்கி
இருபது வீட்டுக் கொருதறி நாட்டி
கூட்டுறவாகக் குறிப்புட னுற்றி
அளவுற நெய்தே அளவுற வுடுத்தி
அளவுறு விலைக்கே எளிதாய் விற்று

அளந்து வாளின் அல்லல் அறுமே...
கொள்ளை லாபக் கொள்ளையில்லாது
வேலைக் கேற்ற கூலியைத் தந்து
கூலிக் கேற்ற கொள்விலை வைத்து
பொதுநலத் தொண்டெனப் புரிந்தா லின்று
நெசவுத் தொழிலில் இசை பெறலாமே!

*

## 73. கதர் வாங்கிடுவீர்!

(புன்னாக வராளி) (ரூபக தாளம்)

கதர் வாங்கிடுவீர் - ஐயா
கதர் அணிந்திடுவீர்
சுதந்திரம் பொலியும் - நாடு
சுகமாய் வாழ்ந்திடுமே [கதர்]

ஆடும் இராட்டையிலே - நூற்றே
ஆசு போட்டு நெய்தே
பாடும் படும் ஏழை - மக்கள்
பாட்டுடன் ஈந்த கதர் [கதர்]

வீட்டுக்கு நன்மை யுண்டு - தறி
வேலைக்கு நூலும் உண்டு.
நாட்டுக்கு நன்மை யுண்டு - எந்த
நாளும் கதர் அணிவீர் [கதர்]

வேந்தர் அணிந்த கதர் — சங்க
வீரர் அணிந்த கதர்
காந்தி அணிந்த கதர் — வள்ளுவர்
கைத்தறி தந்த கதர் [கதர்]

அப்பர் அணிந்த கதர் - நம்
ஆழ்வார் அணிந்த கதர்
கப்பல் கப்பலாகக் — கடல்
கடந்து விற்ற கதர் [கதர்]

பொன்னினும் போற்றிடுவோம் - இதைப்
புகழ்ந்து வாழ்த்திடுவோம்
அன்னம் அளிக்கும் கதர் - இதை
அமுத சுரபி என்போம் [கதர்]

*

## 74. ஏழைகள் யார்?

(நாதநாமக்ரியை) (ஆதி)

ஏழைகள் யாருலகில்?—பணக்கார
எத்தர்கள் யாரினிமேல்
கோழைகள் யாருலகில்—கொடுமைசெய்
கொற்றவர் யாரினிமேல்?

கஞ்சிக்குப் பஞ்சமில்லை—தொழில்செய்யக்
கையுண்டு செய்யும் உண்டு
பஞ்சக் கொடுமையில்லை—எல்லாரும்
பாடுபட்டுப் பிழைப்போம்.

துன்பப்பழஞ் செருக்கை—இன்று
தொக்கி மிதித்தெறிந்தோம்
அன்புக்குத் தொண்டு செய்வோம்—இனி
ஆண்டை--அடிமையில்லை.

வானக் குடைநிழலில்—ஒன்றுபட்டு
வாழும் உரிமை கொண்டோம்
ஞானக் கடவுளுண்டு—ஆன்மநேய
நல்ல சன் மார்க்கமுண்டு-

# 75. சக்கரம் சுழற்றிடுவோம்

சக்கரம் சுழற்றிடுவோம் - செல்வச்
சக்கரம் சுழற்றிடுவோம் ...
சொக்குது ஓம் எனவே - அதன்
சுருதியைக் கேளுங்கடீ [சக்]

கொல்லையில் பருத்தியுண்டு - அதை
கொட்டிட மணையு முண்டு
மெல்லிய நூலிழுத்தே - நெய்ய
விதவிதக் கருவியுண்டு [சக்]

கூழுக்குப் பஞ்ச மில்லை — நல்ல
கோடிக்குப் பஞ்சமில்லை
வாழ்வுக்குப் பஞ்சமில்லை - நூற்க
வாருங்கள் குமரிகளா [சக்]

சந்தியில் வம்படிப்பீர் — வீண்
சரடுகள் திரித்திடுவீர்
குந்தியிருந்து நூற்பீர் — உங்கள்
குடியெல்லாம் வாழுமம்மா [சக்]

ஈனத்தை நீக்கிடுமே — நம்போல்
எளியரைப் போற்றிடுமே
மானத்தைக் காத்திடுமே - இந்த
மங்கல ராட்டினமே. [சக்]

✶

# 76. பாடுபட்டுண்போம்

நெற்றி வேர்வை நிலத்தினிற் சொட்ட
நேர்மையாக உழைத்துப் பிழைப்போம்
கற்றறிவுடன் கைத்தொழில் காப்போம்
கவலை யின்றிக் கருத்துற வாழ்வோம்

கனி விளைத்தோன் கனியினை யுண்ணக்
காவ லில்லை கடுமையு மில்லை
இனிய வுலகினில் ஏழையுமில்லை
இடம்பச் செல்வக் கருமியுமில்லை

பேச் சளந்தொரு செய்கையு மற்ற
பேடி கட்குப் பிழைப்பினி யில்லை
மூச்செலாஞ் செய லாக முன்னேறி
மூதுலகைப் பொன்னுக்க முயல்வோம்

பூத நாதம் பொருந்தும் அணுவில்
புதிய சக்திப் பொருள்களைக் கண்டு
மேதி னியில்விஞ் ஞானப் புலமை
விளக்கி யற்புத வேலைகள் செய்வோம்

மண் ணுலகினை மங்கல மாக்கி
மாந்தர் வாழ்வை அழகின்ப மாக்கி
விண் மதியிலும் வீடு கொண்டாங்கே
வீதி செய்குவோம் வள்ளுவர் பேரால்!

✶

# 77. அண்ணே !

பாடு பட்டுப் பிழைக்கும் — எங்கள்
பாட்டாளி மக்கள் குலம்
நாடு நலம் பெறவே — அண்ணே
நாளும் உழைத்து வருவோம்!

சாதிமத பேதம் — இன்றிச்
சண்டைப் பிசா சின்றி
நீதியுடன் வாழ்வோம் - அண்ணே
நேர்மையாய் வேலைசெய்வோம்!

பக்குவமாய் உழைப்போம் - வந்த
பணத்தைக் குணத்துடனே
சிக்கனமாய் நாளும் — அண்ணே
செலவிட்டு மிச்சம் வைப்போம்

சள்ளை மிக விளைத்தே — பல
சங்கடஞ் செய்து வரும்
கள்ளுச் சனி முகத்தை - அண்ணே
காணாது வாழ்ந்திடுவோம்

புகைக் குடி பொழிப்போம் - கெட்ட
புகையிலை ஒழிப்போம்
பகை செய்யும் சூது — வாது
பக்கத்தில் அண்ட வொட்டோம்

பெண்டு மக்கள் சுற்றம் - நல்ல
பிரியங் கொண்டு நிதம்
உண்டுடுத்தி வாழ - இன்பம்
ஓங்கப் பணி புரிவோம்.

*

# 78. தொண்டு செய் !

தொண்டு செய்: தொண்டு செய்! — மனிதனே
தொண்டுசெய் — நேர்மையாகத்தொண்டுசெய்

படபடப்பி லாமலே
பயந்து சோர்ந்திடாமலே
துடிது டிக்கும் அன்புடன்
துணிந்து வீரத் தொண்டுசெய் [தொ]

விடுதலைக்கு விடுதலை
வெற்றி முரசு கொட்டியே
சுடு துப்பாக்கி முனையிலும்
சூரனாகத் தொண்டு செய் [தொ]

வஞ்ச மற்ற நெஞ்சுடன்
வறுமையற்ற தொழிலுடன்
பஞ்ச மற்று வளமுற
பாடுபட்டுத் தொண்டு செய் [தொ]

நெற்றி வேர்வை சொட்டவே
நிலம் கனிந்து கொட்டவே
சுற்றி யின்பம் சூழவே
தொல்லுலகு வாழவே [தொ]

பேச்செலாம் செயல்களாய்
பிரிய மான தாயைப்போல்
மூச்செலாம் முயற்சியால்
முகமலர்ந்து தொண்டு செய்
தொண்டு செய்; தொண்டு செய் - மனிதனே!

✱

# 79. இராம ராஜ்யம்

(இராகம் காபி) (தாளம் ஜம்பை)

தேசநலம் பெருக — கிராம
சேவை செய்வோம் — தொண்டு —
ஆவலுடன்வாரீர் [தேச]

மாசற்ற கூட்டுறவும் - சுப
மங்கல வாழ்க்கையும் பொங்கிப்பொலியவே!
[தேச]

தண்ணீர் வசதி செய்வோம் - எங்குந்
தளதள வென்னப் பயிர் தழைத்தோங்கவே
மண்ணைப் பொன் ஞக்கிடுவோம் - வாச
மலரும் கனியும் குலுங்கி மணக்கவே [தேச]

பஞ்சத் துயருமுண்டோ - இனிப்
பாட்டாளியே இந்த நாட்டாளி யாமென்
போம்

வஞ்சமில்லா துழைப்போம் — பூமி
வாரிக் கொடுக்கும் அமுதவளங்களைத் [தேச]

பண்ணை வளர்த்திடுவோம் — மாட்டுப்
பண்ணை வளர்ப்போம் - நெய். பால், தயிர்
வெண்ணையும்

உண்ணக் கொடுத் திடுவோம்- நல்ல
ஊட்டம் பெருக இந் நாட்டுப் புதல்வர்க்கு
[தேச]

நோயற்ற வாழ்வு ரைப்போம் — அவர்
நூறுண்டு பாராண்டு தீரராய் வாழ்ந்திடத்
தூயமருந்தளிப்போம் — சக்தி
தூண்டுவோம் யோகச்சுடரைத்தினம்தினம்
[தேச]

கல்வி யொளி பரவ - இந்தக்
காலத்திற்கேற்ற விஞ்ஞானக் கலையுடன்
செல்வத் தொழில் வளர – வீர
தீரராய்த் தாயகச்சேய்கள் பொலியவே [தேச]

சாதி சமயச் சண்டை – இன்றி
சன்மார்க்க மான சமயோக ஒற்றுமை
வீதி யெல்லாம் பரவ – நம்
வீடுதோறும் சக்தி வீறுற் றுெளிரவே [தேச]

காலைத் தேனீக்களைப் போல் – இன்பக்
கனிமலர்த் தென்றல் இனிது பரவிடும்
சோலைப் பறவைகள் போல் – எங்கும்
சுத்த சுதந்திர வாழ்வு துலங்கிட [தேச]

வம்பு வழக் கின்றி – நல்ல
வாய்மையும் தூய்மையும் சுத்தான்ம நேயமும்
அன்பு அருட் பணியும் - போற்றி
ஆறுங் கடலும் போல் ஆனந்த வாழ்வுறத்
[தேச]

வெற்றுரை பேசி நில்லோம் - கால
வேகத்தை வென்றிடும் ஊகத் தொழில்
செய்யக்

கற்றுக் கடமைசெய்வோம் - தொழிற்
கையாலே நாளும் கடவுளைப் போற்றுவோம்
(தேச)

பக்குவக் கூட்டுறவால் - விளை
பண்டம் பொதுவெனக் கொண்டு கொடுத்
திங்கே

எக்காலும் ஓர்குலமாய் - நாம்
எல்லோரும் எல்லோர்க்கும் இன்புறவாழு
வோம்

தொண்டுகள் செய்திடுவோம்.

★

## 80. கலைஞன் யார்?

மானிட வாழ்வை வாடா
மணமல ரென்னச் செய்து,
தேனினும் இனிய தான
தீஞ்சுவைக் கவிதை யாக்கு,
ஊனிலே ஆடுகின்ற
உயிரினை அமுத மாக்கி
ஆனந்தக் கனவில் வாழ்வோன்
அருங்கலைச் சிற்பியாமே!

கவிதையும் பாட்டும் கூத்தும்
கவின்பெறு படமுங் காட்டி,
நவரஸம் உருக்கி வார்த்த
நயங்களைத் துலக்கி நாளும்,
புவியினை அழகு செய்யும்
புண்ணியக் கலைஞ ராலே
சிவம்பெற மனித வாழ்வு
தேவவாழ் வாகு மன்றே.

★

## 81. ஞானக் கும்மி

வேலொத்த கண்ணொளி வீசிடவே - அன்பு
விம்மிக் கொங்கை குலுங்கிடவே
காலிற் சலங்கை கலீரெனவே - தங்கக்
கைகொட்டிக் கும்மி யடித்திடுவோம்.

பாலைப் பொழிந்திடும் வெண்ணிலவில்
பரவசமான குரலெடுத் தே
ஞாலத்திலே புது நன்மை விளைந்திட
ஞானக் கும்மி யடித்திடுவோம் - விஞ்
ஞானக் கும்மி யடித்திடுவோம்

வானத்திலே மழை மின்னலுண்டு - நர
வாழ்வினிலே மனப்பின்னலுண்டு;
ஞானத்திறுலதைக் கட்டவிழ்த்தால் — வரும்
நல்ல சுதந்திர வெள்ளமம்மா

அன்பினை மிஞ்சும் அறமும் இல்லை — இங்கே
ஆண்டானடிமைத் திறமு மில்லை....
இன்பச்சுயேச் சைக்கிச் சாதியில்லை - என்றே
எக்காளம் ஊதுவோம் வீதியெல்லாம்

ஒன்றுக்கும் மிஞ்சிய தெய்வ மில்லை - நம்
உள்ளத்தி லல்லதோர் உய்வுமில்லை
கன்றுக்குத் தாயென வந்தாலும் - அந்தக்
கருணை வாழ்கெனக் கும்மியடி

பார்வைக்கு மிஞ்சிய பூமியுண்டு - தோழி
பல்லுயி ராகிய சாமியுண்டு
பேர்வடி வாகிய பேதமில்லை - மனப்
பேத மில்லாது விரோதமில்லை

கண்ணைக் கடந்ததொரு காட்சியுண்டு - இரு
காதைக் கடந்ததொரு கேள்வியுண்டு
பண்ணைக் கடந்ததொரு பாட்டுமுண்டு - சகி
பாட்டைக்கடந்த தொரு நாட்டமுண்டு

உள்ளத்திலே இன்பந்துள்ளுதடீ - நெஞ்சம்
உண்மை இது வெனச் சொல்லுதடீ
கள்ளத்தைக் காணக் கசக்குதடீ - வீண்
கட்சிப்போர் நாட்டை நசுக்குதடீ!

நெஞ்சத்திலே வளர் நேசமுண்டு - தோழி
நேசருள்ளே விசு வாசமுண்டு,
வஞ்சத்திலே பல வேஷமுண்டு - மத
வாதத்திலே பல மோசமுண்டு.....

நெட்டையும் குட்டையும் பாராதே - செல்வ
நீட்டையும் வீட்டையும் பாராதே,
கட்டுங் கவலையுமின்றிச் சுதந்திரக்
காதலிலே தாழ்வு வாராதே!

ஆணைச் சிவனென நம்பிடுவாய் - பெண்ணை
அம்பிகை என்று நீ கும்பிடுவாய்,
காணும் உலகெல்லாம் கோயிலென்பாய்
- உள்ளம்
கடவுள் காட்டிடும் வாயிலென்பாய்

பாடுபட் டோருக்குக் கூலியுண்டு - உள்ளம்
பலனுக் கேற்ற நிலனுமுண்டு,
நாடு முழுவதும் கூடியுண்போம் - ஆத்ம
நாதன் புகழினைப் பாடியுண்போம்

காசாசை கொண்ட கவிஞனில்லை - உண்மைக்
கனவில் வாழும் கலைஞனடா! - அவன்
பேசாத பேரின்பப் பித்தனம்மா - மனப்
பேயை யடக்கிய சித்தனம்மா!

★

## 82. துணிவுள்ள வீரர்கள்

துணிவுள்ள வீரர்கள் அணிசேர வருக
துன்பத்தைத் தூவென்னும் துணைவர்கள் வருக
பணிவுள்ள தொண்டர்கள் படைசேர வருக!
பரிசுத்த மனமுள்ள பக்தர்கள் வருக.

பேருக்கும் புகழுக்கும் பேராசை யின்றிப்
பிறருக்கு வாழ்ந்திடும் பெரியார்கள் வருக!
ஊருக்கு ழைத்திடும் உத்தமர் வருக
உபகார சீலர்கள் உடனோடி வருக!

அருளினைத் தேடிடும் அறவோர்கள் வருக
அன்புடன் கூடிடும் பண்பர்கள் வருக
பொருளினைப் பொதுவாக்கும் புண்ணியர் வருக
பொழுதினைப் பொன்னாக்கும் புலவர்கள் வருக

பீடுறத் தொழிலாற்றும் பெருமையோர் வருக
பிச்சை கேளாத பெருந்தொண்டர் வருக
நாடுமுன் னேறவே வீடுமுன்னேற
ஞாலமுன்னேறவே நாடுவோர் வருக!

அஞ்சாத தீரர்கள் அரிபோல வருக
அடிமைத் தளைகளைப் பொடிசெய்ய வருக!
துஞ்சாத பரஞான சூரியர் வருக
சுத்தான்ம நேயர்கள் சுடரோங்க வருக!
வருக! வருக! வருக!

# கவியோகி சுத்தானந்த பாரதியாரின் அரிய நூல்கள்.

—(o)—

1 ஆத்ம சாதனம்— இனிய எளிய நடையில் மிகச் சுவையான வாழ்வுக் குறிப்புகளும், உலக மகான்களின் உள்ளமும் அடங்கியது.

விலை ரூபா. 4 00

2 கீதா யோகம்— புதிய சித்தாந்த உரை. வடமொழி மூலமும் தமிழில் உள்ளது. அனுபவயோகவிழி கொண்டு எழுதப்பட்ட இந்நூல் எல்லாச் சமயத்தாரும் ஓதி ஒழுகத்தக்கது.

விலை ரூபா. 2. 50

3 VOICE OF TAYUMANAR- Life and hymars of St St. Tayumanar in Vilrarb Style

Rs. 2. 50

4 GOSPEL OF PERFECT LIFE-
A clear guide to human life Rs. 4. 00


## சுத்தானந்த நூலகம்,

## SHUDDHANANDA LIBRARY

Yoga Samaj Adyar

MADRAS. 20

ஆத்ம ஜோதி நிலைய வெளியீடு

நாவலப்பிட்டி,
(சிலோன்)

விலை ரூபா 1.50

ஆத்மஜோதி அச்சகம், நாவலப்பிட்டி.